# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, டிசம்பர் 14, 2018. இதழ் - 43






**அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம்**

**விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் – இரசாயனவியல்**


பக்கம் - 11



**மட் / மாநகரசபைக்குள் இல்லாதொழிக்கப்பட்ட பொதுமலசல கூடங்கள்**

மனித மலத்தை மனிதனே எடுக்கும் கொடூரத்துக்கு முடிவெடுக்க வேண்டும்

பக்கம் - 10



**பெண்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட.**

மனஅழுத்தம் (Stress) என்பது ஒரு நோய் அல்ல.

பக்கம் - 14



**எம்மைப்பார்த்து பரிதாபம் சொல்லாதீர்கள் ஆதரவு தாருங்கள்**

என்ற ஓசையொன்று கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில்

பக்கம் - 07



## ‘பாராளுமன்றத்தை கலைத்தமை அரசியலமைப்புக்கு முரணானது’

### --- உயர் நீதிமன்றம் தீர்ப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமை அரசியல் யாப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை மாலை ஐந்து மணிக்கு தீர்ப்பு வழங்கியுள்ளது. ஏழு நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் இன்று பல மணிநேர விசாரணையின் இவ்வாறு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப் பட்டதையடுத்து நவம்பர் 12 ஆம் திகதி ஐக்கியதேசியக் கட்சி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகளும் பொது அமைப்புகளும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுக்களை விசாரணை செய்த உயர் நீதிமன்றம், நாடாளுமன்றம் கலைத்தமை தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இதனால் நாடாளுமன்றம் மீண்டும் 14 ஆம் திகதி கூடியது. இந்த நிலையில் ஏழு பேர்கொண்ட உயர் நீதிமன்றம் இன்று மாலை அந்த இடைக்காலத் தடை உத்தரவை உறுதிப்படுத்தி, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசியல் யாப்பின் 19 ஆவது திருத்தத்தச் சட்டத்திற்கு முரணானது என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா தலைமையில் நீதியரசர்கள் பிரசன்ன ஜயவர்தன, பிரியந்த ஜயவர்தன, புவனேக அலுவிஹாரே, விஜித் மலல்கொட, சிசிர டீ ஆப்ரூ, முருது பெர்னாண்டோ ஆகியோர் கொண்ட நீதியரசர் குழு மனுக்களை விசாரித்தனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டுநகரின் மைந்தன் பிரின்ஸ் காசிநாதர் காலமானார்



மட்டக்களப்பின் சிறந்த பேராசானும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரின்ஸ் காசிநாதர் அவர்கள் தனது 93வது வயதில் காலமானார்.

சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் புதன்கிழமை மாலை 4 மணியளவில் காலமானதாக கூறப்படுகின்றது.

இலங்கையில் மிகுந்த இன்னல்கள் மிகுந்த காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இவர் பணியாற்றியிருந்தார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியில்தான் இலங்கை-இந்திய உடன்படிக்கை கைச்சாதிட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1989ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டுவரையும் ஈபிஆர் எல் எப் அமைப்பின் சார்பில் (தமிழர் விடுதலைக்கூட்டணி) மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்களுக்கு காத்திரமான சேவையாற்றியுள்ளார். நாட்டிலே யுத்தக் கெடுபிடிகள்,வன் முறைகள் உக்கிரமாக வெடித்த காலப்பகுதியில்தான் அமரர் பிரின்ஸ் காசிநாதர் ஒரு சமாதான புருஷராகவும்,சாரணராகவும் இருந்து இளைஞர், யுவதிகளையும் யுத்தத்தின் அழிவில் இருந்து காப்பாற்றி இருக்கின்றார்.

பேராசானாகவும், அதிபராகவும் இருந்து மட்டக்களப்பின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுவந்ததுடன் மட்டக்களப்பு மண்ணின் அடையாளமாக கருதப்படும் பாடுமீன் தொடர்பிலான பரந்த ஆய்வினை மேற்கொண்டு அதனை வெளி உலகுக்கு கொண்டுசென்ற பெருமையினையும் அமரர் பிரின்ஸ் காசிநாதர் பெற்றுள்ளார். மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் மீக நீண்ட காலமாக அதிபராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிய காசிநாதர் அவர்கள் அந்த பள்ளிக்கூட மாணவர்கள் உலகெங்கும் புகழ்க்கொடி பறக்க வாழ்வதற்கு காரணமாக இருந்திருக்கிறார். அவரால் கடுமையான கண்டிப்புடன் வளர்க்கப்பட்ட மாணவர்களின் நெஞ்சங்களில் அவர் நிறைந்து நிற்கிறார்.

அன்னாரின் இழப்பில் வாடும் அவரது உறவினர்கள், மாணவர்கள் மற்றும் நண்பர்களுடன் அரங்கம் பத்திரிகைக் குடும்பமும் சோகத்தில் கலந்துகொள்கிறது.

மட்டுநகரின் ஒரு சிறந்த பிரஜைக்கு அரங்கம் இதழ் பிரியாவிடை கொடுக்கிறது.

அன்புடன்
சீவகன் பூபாலரட்ணம்

ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76



## 'இனிய மாலைப் பொழுதில் இலக்கிய வாதியுடனான சந்திப்பு'

மகுடம், "கா" இலக்கிய அமைப்புக்கள் அரங்கம் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும் பிரபல எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன் (பிரான்ஸ்) உடனான

திறந்த கலந்துரையாடல் நிகழ்வு.

#காலம்: 15-12-2018 சனிக்கிழமை, மாலை 4.30 மணி.

#இடம்: அரங்கம் பத்திரிகை அலுவலகம் - பார் வீதி மட்டக்களப்பு.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.




## 'அம்பாறையில் 5ஆவது குழந்தை பெறும் தமிழ்க்குடும்பத்திற்கு 25ஆயிரம் ரூபாய் சன்மானம்!'



அம்பாறை மாவட்டத்தில் ஐந்தாவது குழந்தை பெறும் தமிழ்க்குடும்பம் ஒவ்வொன்றிற்கும் இருபத்தையாயிரம் ருபாவை சன்மானமாக உடன் வழங்க வசீகரன் அறக்கட்டளை நிதியம் என்னும் அமைப்பு முன்வந்துள்ளது.

இதனை வசீகரன் அறக்கட்டளை நிதிய வடகிழக்குமாகாண பணிப்பாளரும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அறிவித்துள்ளார்.

அம்பாறை வளத்தாப்பிட்டிப் பிரதேசத்தில் க.பொ.த. சாதாரணதர மற்றும் ஏனைய மாணவர்களுக்கான இலவச பிரத்தியேக வகுப்புகளை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் இதனை தெரிவித்தார். இந்நிகழ்வு 12/12/2018 இல் வளத்தாப்பிட்டியில் நிதியத்தின் மாவட்டத்தலைவர் பி.பிரபு நடைபெற்றது

தொடர்ச்சி... (பக்கம் -10 )

## அனர்த்தத் முன்னாயத்தச் செயற்பாட்டுக்கான பயிற்சியாளர் பயிற்சி நெறி



சமூதாய மட்டத்தின் ஊடாக அனர்த்த முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த்தத் முன்னாயத்தச் செயற்பாட்டுக்கான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நெறி திங்கட்கிழமை கொழும்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்றது.

இரண்டு நாட்களைக் கொண்ட இப் பயிற்சியாளர்களுக்காக பயிற்சி நெறியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பணியாற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிருவாகக் கிராமசேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன், சமுர்த்தித் திணைக்கள பணிப்பாளர் திருமதி ஏ.பாக்கியராஜா, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவின் பணிப்பாளர் சுகத் திசநாயக்க, மட்டக்களப்பு வானிலை அவதான நிலையத்தின் அதிகாரி கே.சூரியகுமார், சமுர்த்தித்திணைக்கள தலைமையக சிரேஸ்ட முகாமையாளர் சம்பா ஜானக ஒபதா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

## "காட்டிலிருந்து வந்தவன்" சிறுகதைத்தொகுதி அறிமுகவிழா

தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) நடத்தும் சுதாராஜின் "காட்டிலிருந்து வந்தவன்" சிறுகதைத்தொகுதி நூல் அறிமுகவிழா எதிர்வரும் 15.12.2018சனிக்கிழமை அன்று மாலை 5.15 க்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு, சாகித்தியரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமை வகிப்பார். இவ்விழாவில் தமிழ் வாழ்த்தினைசெல்வி. ஹம்ஷிகா கிருபாகரன் வழங்குவார்.

திரு. மு. தயாபரன் வரவேற்புரையை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை திருமதி வசந்தி தயாபரன் அவர்களும், கருத்துரைகளை திரு.ஆ.இரத்தினவேலோன், திருமதி ராணி சீதரன் ஆகியோர் வழங்குவர். ஏற்புரையை நூலாசிரியர் திரு. சுதாராஜ் வழங்குவார்.

## கிழக்கில் 760ஆசிரியர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்!



கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வருட காலமாக இழுத்தடிக்கப்பட்டுவந்த இவ்வாண்டுக்கான (2018) ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் ஜனவரியில் அமுல்படுத்தப்படவுள்ளன என கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம். மன்சூர் தெரிவித்தார். கிழக்கிலுள்ள 17 கல்வி வலயங்களில் மொத்தமாக 760 ஆசிரியர்கள் இம்முறை இடமாற்றத்திற் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விடமாற்றங்கள் யாவும் பாடசாலை முதலாந்தவணை தொடங்கும் 2019 ஜனவரி 2ஆம் திகதி முதல் அமுலுக்குவருகின்றன. குறித்த 760 ஆசிரியர்களுக்குமான இடமாற்றக்கடிதங்கள் அடுத்த வாரமளவில் அனுப்பிவைக்கப்படுமென்று பணிப்பாளர் மன்சூர் தெரிவித்தார்.

தொடர்ச்சி... (பக்கம் -10 )

## மட்டக்களப்பில் 'பேர்கர்' கலாசார ஒன்றியத்தின் வருடாந்த ஒளிவிழா




தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) நடத்தும் சுதாராஜின் "காட்டிலிருந்து வந்தவன்" சிறுகதைத்தொகுதி நூல் அறிமுகவிழா எதிர்வரும் 15.12.2018சனிக்கிழமை அன்று மாலை 5.15 க்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.


இவ்விழாவுக்கு, சாகித்தியரத்னா பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமை வகிப்பார். இவ்விழாவில் தமிழ் வாழ்த்தினைசெல்வி. ஹம்ஷிகா கிருபாகரன் வழங்குவார்.

திரு. மு. தயாபரன் வரவேற்புரையை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை திருமதி வசந்தி தயாபரன் அவர்களும், கருத்துரைகளை திரு.ஆ.இரத்தினவேலோன், திருமதி ராணி சீதரன் ஆகியோர் வழங்குவர்.



ஏற்புரையை நூலாசிரியர் திரு. சுதாராஜ் வழங்குவார்.

## மட்டக்களப்பில் சர்வதேச திரைப்பட விழா



எதிர்வரும் டிசம்பர் 14, 15, 16ம் திகதிகளில் மட்டக்களப்பு கல்லடி சாந்தி திரையரங்கில் சர்வதேச திரைப்பட விழா ஒன்று நடைபெறவுள்ளது.

"சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா 2018" என்ற பெயரில் இந்த விழா நடைபெறவுள்ளது.

இதனை சிறகுநுனி கலை, ஊடக மையம் ஏற்பாடு செய்துள்ளது. டிசம்பர் 14 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்ப நிகழ்வும் அதைத் தொடர்ந்து 6.00 மணிக்கு சிறப்புத் திரைப்படக் காட்சியும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.

இலங்கை, பங்களாதேஷ், ஈரான், போன்ற ஆசிய நாடுகளுடன் ஐரோப்பிய நாடுகளும் கலந்து கொள்ளும் இத்திரைப்பட விழாவில் 9 முழு நீளத் திரைப்படங்களும் குறுந்திரைப்படங்களும் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளன.

திரைப்படங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் உபதலைப்பிடப்பட்டுள்ளன. இலங்கைத் திரைப்படங்களின் உரையாடல்கள் தமிழிலும் சிங்களத்திலுமாக அமைந்துள்ளன.

# அறுகம்பைக் கடலோரம் - ஒரு இடப்பெயர் ஆய்வு



கிழக்கிலங்கை என்றதும் இரு சுற்றுலாத்தலங்கள் தவறாமல் நினைவுக்கு வரும். ஒன்று, பாசிக்குடா இன்னொன்று அறுகம்பே. நாம் இப்போது வந்திருப்பது அறுகம்பேக் கடலோரம். என்ன முழிக்கிறீர்கள்? சீசன் இல்லாத காலத்தில் ஏன் நாம் அறுகம்பைக்கு வரவேண்டும் என்றா? ஹலோ, நாம் இங்கு வந்திருப்பது, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை புதினம் பார்த்து வாய் பிளக்கவோ, கடலில் குதித்து குளித்து மகிழவோ இல்லை. இந்த இடத்தின் பெயரை ஆய்வு செய்ய. கவனம் அலைகளில் கால் படாமல் தள்ளி நின்றுகொண்டே சொல்வதைக் கேளுங்கள்.

'அறுகம்பை மட்டக்களப்புக்குக் கிழக்குப் புறம் 64 மைல் தொலைவிலுள்ள ஒரு கிராமம். அதேபெயரிலுள்ள ஒரு குடாவின் கரையில் அது அமைந்திருக்கிறது. அங்கு களியாலான சிறுகோட்டையொன்று



இடச்சுக்காரர்ளால் ஒருமுறை இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது அங்கு நெல் சேமிக்கப்படும் ஒரு களஞ்சிய அறை உள்ளது' என்று 1834இல் எழுதுகிறார் சைமன் காசிச்செட்டி.

யாரிந்த சைமன் காசிச்செட்டி? இலங்கையின் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் ஆளுமைகளுள் குறிப்பிடத்தக்கவர் சைமன் காசிச் செட்டி. புத்தளம் கற்பிட்டியில் பிறந்த இவர், இலங்கையின் சட்டவாக்கக் கழகத்தில் தமிழ்ப்பிரதிநிதியாகப் பதவி வகித்தவர். இலங்கைத் தமிழர் மற்றும் தமிழ் மொழி பற்றி பிரித்தானியரின் கவனத்தை அதிகம் ஈர்த்தவை, இவரது ஆக்கங்களே என்றால் மிகையாகாது. உதயாதித்தன் என்ற தமிழ்ச்சஞ்சிகை, தமிழ்ப்புலவர் வரலாறு கூறும், 'தமிழ் புளூடாக்', இலங்கை வரலாற்றைக் கூறும் சரித்திர சூதனம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை. எனினும் இவை எல்லாவற்றையும் விட அதிகம் புகழ்பெற்றது, இலங்கையின் மாவட்டங்கள், கிராமங்கள், சாதிகள், சமயங்கள் பற்றிய சுருக்கமான சமகாலத் தொகுப்பான சிலோன் கசெற்றியர். கொட்டாவை தேவாலய திருச்சபையால் 1834இல் வெளியிடப்பட்ட இந்நூலில் உள்ள தகவல்கள், அவற்றின் சமகால இயல்பால் இன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. அந்நூலில் தான் அறுகம் பற்றிச் சொல்கிறார் காசிச்செட்டி.

அறுகம் என்று காசிச்செட்டி சொல்லும் இந்தக் கிராமம் வேறெதுவுமில்லை. இன்றைய புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான அறுகம்பை தான். அறுகாமம் என்பதே அதன் சரியான பெயர். பசறையில் தோன்றி கிழக்கே ஓடிவந்து அறுகாமத்துக்கு அருகில் கடலில் கலக்கும் ஆற்றுக்கும் அறுகாம ஆறு என்று தான் பெயர். இன்று அதை குருந்த ஓயா என்கிறார்கள். அறுகாம ஆற்றினால் அறுக்கப்பட்டதால் தான் இவ்வூருக்கு அறுகாமம் என்று பெயர் வந்ததோ, தெரியவில்லை. அல்லது அறுகம்புற்கள் செறிந்து வளர்ந்த பகுதியாகவும் இருந்திருக்கலாம். கிழக்கிலங்கைத் தொன்மங்களில் இது 'அறுகமனப் பூமுனை' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பின் முதற்பெரும் தேசத்துக்கோவில் இறைவனான திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமியின் ஆளுகைக்குட்பட்ட வட எல்லையாக அம்பிளாந்துறையையும், தென்னெல்லையாக இந்த அறுகமப்பூமுனையையும் சொல்வது மரபு.

அறுகம், அறுகாமம் என்பவற்றுக்கு சம்பந்தமின்றி, அறுகம்பையில் வரும் அந்த 'பை' ஏன் என்று யோசித்திருக்கிறீர்களா? வேறொன்றுமில்லை. நம்மவர்கள் தான் அதீத அறிவாளிகள் ஆயிற்றே. அறுகம் குடா என்ற தமிழ்ச்சொல்லை வெள்ளையன் அறுகம்பே (Arugam Bay) என்று மொழியாக்கினால், நாம் அதை மீண்டும் அறுகம்பை என்று தமிழ்ப்'படுத்தியிருக்கிறோம்'.

பழைய பாணமைப்பற்றில் முக்கியமாக இருந்த இரு ஊர்களில் ஒன்று அறுகாமம். மற்றையது பெரிய பாணகை என்று அறியப்பட்ட இன்றைய பாணமை. பிற்காலத்தில், அறுகாமம் என்ற தனி ஊர், பொத்துவில், அறுகம் என்று இரு தனித்தனி ஊர்களாக இனங்காணப்படத் தொடங்கிவிட்டது என்பது வேறு ஐரோப்பியப் பதிவுகளில் தெரியவருகிறது. பொத்துவில் என்ற இடப்பெயரை ஆராய்ந்தால், அது பொதுவில் அல்லது புற்றுவில் அல்லது போதிவில் என்ற சொற்களிலிருந்து தோன்றியிருக்கக்கூடும். வில் என்றால் ஈழத்தமிழில் சிறுகுளத்தைக் குறிக்கும். வில் வடிவில் வளைந்திருக்கும் இந்தச் சிறுகுளங்களின் இன்னொரு குறிப்பிடத்தக்க இயல்பு, இவை கோடைகாலத்தில் வற்றி மேய்ச்சல் நிலமாக மாறிவிடும் என்பது. அப்படி பல சமூகத்தவருக்கும் பொதுவாக இருந்த, அல்லது புற்றுக்கு அண்மையில் இருந்த, அல்லது போதிமரத்துக்கு (அரசமரம்) அருகில் இருந்த வில்லொன்றின் காரணமாக பொத்துவில் என்ற பெயர் தோன்றியிருக்கலாம்.

இது மகாயான பௌத்த மையமாக இருந்திருக்கக்கூடும் என்பது, பொத்துவில் கடற்கரையோரமாக அமைந்திருந்த பழைமை வாய்ந்த முகுது மகா விகாரையில் கிடைத்துள்ள போதிசத்துவர் சிலைகள் மூலம் தென்படுகிறது. எனினும், சமீப காலமாக, துட்டகைமுனுவின் தாய் விகாரமாதேவி கடலில் வந்து ஒதுங்கிய இடம் பொத்துவில் தான் என்றும், இங்கு தான் உரோகண மன்னன் காக்கைவண்ண தீசன் ஒரு விகாரம் எழுப்பினான் என்றும் ஐதிகங்கள் உருவாகிப் பரவுகின்றன. ஆரம்பத்தில் இப்படி விகாரமாதேவி கடலில் அடைந்த இடம் என்று, அம்பாந்தோட்டையிலுள்ள கிரிந்த பகுதியைத் தான் சொல்லி வந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.


பொத்துவில் இருக்கட்டும். உல்லைப் பக்கம் காலாற நடப்போம் வாருங்கள். அதென்ன உல்லை? அறுகம்பையின் உள்ளூர்ப் பெயரான 'உல்லை' என்பது எப்படி வந்ததென்று சரியாகத் தெரியவில்லை. அது 'நுல்லை' அல்லது 'நுள்ளை' என்ற மட்டக்களப்பு வட்டாரவழக்குச் சொல்லிலிருந்து திரிந்திருக்கலாம். நுல்லை என்ற சொல், இங்கு மாரி கால வெள்ளத்தால் கடக்கமுடியாதபடி பாதிக்கப்படும் சிறுவழிகளைக் குறிக்கும். அறுகங்களப்பின் இரு கரைகளையும் இணைத்த நுல்லை என்ற சிறுவழியின் பெயரே பின்பு உல்லை ஆகியிருக்கலாம். பேச்சுவழக்கு நுல்லை என்பது, பழந்தமிழில் 'நுழை' என்று எடுத்தாளப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடடே! சைமன் காசிச்செட்டி சொன்ன ஒரு முக்கியமான குறிப்பை நான் தவற விட்டுவிட்டேன். என்னவென்று கண்டுபிடித்தீர்களா?. அதே தான். அறுகங்குடாவில் இருந்த களிமண்ணாலான ஒல்லாந்தரின் சிறுகோட்டை.

ஆம், காசிச்செட்டியார் சொல்வது உண்மை தான். பழைய ஒல்லாந்து இலங்கை வரைபடங்களைத் தட்டினால், பாணகைக்கு வடக்கே 'அப்புறத்தோட்டை' அல்லது 'அப்பர்ர தோட்டம்' என்ற பெயரில் அமைந்திருந்த சிறு இடச்சுக்கோட்டை ஒன்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஒல்லாந்து ஆளுநராக விளங்கிய வான்கூன்ஸ் என்பவர், தென்கிழக்கிலங்கையை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ச்சியாக வைத்திருக்க, இந்தக் கோட்டையைப் பெருப்பித்துக் கட்டும் திட்டம் கொண்டிருந்தாராம். இப்போது இந்தக் கோட்டையின் அடையாளம் எதுவும் இல்லை. இது அறுகாமத்தின் அருகே இருக்கும் பசறிச்சேனை பகுதியில் அமைந்திருக்கலாம் என ஊகிக்கமுடிகிறது.

இப்படி பல வரலாற்றுத்தகவல்கள் நமக்கு அறுகம்பை சார்ந்து கிடைக்கின்றன. அடுத்த தடவை அறுகம்பைப் பக்கம் போகக்கிடைத்தால், தொபுக்கடீர் என்று தண்ணீரில் பாய்ந்து குளிப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல், இந்தப் பெயர் விடயங்களையும் மறக்காமல் அசைபோடுங்கள். ஏனென்றால், வரலாறு முக்கியம் அமைச்சரே!

## - கண்ணீர் அஞ்சலி -



தாயின் மடியில்:
09.10.1957

தேவன் பாதத்தில்:
30.11.2018

### அமரர் திரு மரீனோ சசாங்கன் கனகசூரியம்

அவர்கள் பிரித்தானியாவில் காலமானார். அன்னார், மறைந்த அன்டன் கனகசூரியம் மற்றும் திருமதி சிபில் மலர் ஆகியோரின் மகனும், ராஜேந்தர், சிக்கான், சுகன்யா, ரேவதி, யாதவி, மற்றும் உமேசன் ஆகியோரின் சகோதரரும் ராஜேசின் மருமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 34, கண்ணகி அம்மன் கோயில் வீதி, பூம்புகார், மட்டக்களப்பு என்னும் இல்லத்தில் டிசம்பர் 17ஆம் திகதி காலை முதல் இறுதி மரியாதைக்காக வைக்கப்படும்.

இறுதி திருப்பலி டிசம்பர் 17ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்று, ஆலையடிச்சோலை மயானத்துக்கு அடக்கத்துக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

தொடர்புகளுக்கு : 077 364 6918

# தமிழ் துரோகியாய், இடதுசாரி எதிர்ப்பாளனாய் பார்த்தோமே!



1960 களின் கடைப்பகுதி அன்றைய தமிழரசுக்கட்சியின் ஹர்த்தாலினால் மட்டக்களப்பு ஸ்தம்பித்துப்போய் இருந்தது.

மட்டக்களப்பின் கச்சேரி இயங்கவில்லை. மக்கள் அதனை ஒரு மாத காலம் இயங்க விடவில்லை அதைச் சுற்றி இராப்பகலாகச் சத்தியாக்கிரகத் தொண்டர்கள்.

தமிழுணர்ச்சி கரை புரண்டோடியது.

அந்தச் சத்தியாக்கிரகிகளினால் மட்டக்களப்பின் அனைத்து மக்களும் ஈர்க்கப்பட்டனர். அப்போது காலம் சென்ற கவிஞர் சுபத்திரன் என அழைக்கப்பட்ட தங்கவடிவேல், கா,சி ஆனந்தன், முழக்கம் முருகப்பா எனது மைத்துனர் வடிவேல் ரமணி, தம்பையா ஆகியோர் மட்டக்களப்பு மத்தியகல்லூரியில் படித்துக் கொண்டிருந்தனர்.

துடிப்பான மாணவர்கள்.

அவர்கள் இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முன்னணித் தொண்டர்கள் நான் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன் வயது 16.
சத்தியாக்கிரகத்தில் நானும் ஓர் தொண்டன். இந்த மாணவத் தொண்டர்களுக்கிடையே அடிபட்ட பெயர்களில் ஒன்று பிறின்ஸ் காசிநாதர்
அவர் மட்டக்களப்பு மத்திய கல்லூரியின் ஆங்கில ஆசிரியர். இளைஞர் அவருக்கு எல்லோரும் கிடி நடுக்கம். அவருக்குப் பயந்து பயந்துதான் அவர்கள் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டனர்.
அந்தப் பயங்கரமான ஆசிரியர் பற்றி என்னிடம் பல கதைகள் கூறினர்.

அவரின் அடிகளும் உதைகளும் ஏச்சுகளும் பற்றிக் கதை, கதையாகக் கூறினர். என் மனதில் ஓர் கண்டிப்பான மனிதரின் உரு பதிந்து விட்டது. அவர் கற்பித்த கல்லூரியில்தான் எஸ்.பொ வும் எழுத்தாளர் பாலகிருஸ்ணனும் கற்பித்தனர். அவர்களும் அவரின் கண்டிப்பு பற்றி என்னிடம் கூறியுள்ளனர்.

தமிழரசுக்கட்சி எதிர்ப்பாளர்களில் காசிநாதர் ஒருவர் எனும் பிம்பம் இன்னொரு வகையில் அவர் ஓர் தமிழ்த் துரோகியாக எம் போன்ற சிறுவர்களால் பார்க்கப்பட்டார்.

1966, 67 களின் நடுப்பகுதியில் மட்டக்களப்பில் கிருஸ்ணக்குட்டி தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி தீவிரமாக இயங்கியது. அதற்கு தொழிலாளர் மத்தியில் சிறிது ஆதரவும் இருந்தது.

அக்கட்சி சார்பில் அன்றைய இளைஞர்களான நானும் சுபத்திரனும்,வடிவேலும் இன்பமும் துரைரத்தினமும் சிவராஜாவும் இன்னும் சிலரும் மலை நாட்டில் மண் சரிவால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவ ஒரு கலை நிகழ்வு நடத்த பாடசாலைகளுக்கு ரிக்கற் விற்கச் சென்றோம்.

அந்தப் பயங்கரமான பிறின்ஸ் காசிநாதர் என்ற இளம் ஆசிரியரை மத்திய கல்லூரியில் சந்தித்தோம். அந்த முதல் சந்திப்பு எனக்கு இப்போதும் மனதில் பதிந்துள்ளது அவரின் உயர்ந்த உருவம் மிடுக்கான தோற்றம், அரும்பான மீசை கூர்மையான பார்வை எம்மைப் பயமுறுத்தின. ஆங்கிலத்தில் சில கேள்விகள் கேட்டார். கணீரென்ற குரல் நாம் பதில் சொல்லாமல் நின்றோம் பின் தமிழில் ஆரம்பித்தார்.

'நீங்கள் எல்லாம் கம்யூனிஸ்ட்களா?'

என உறுக்கி ஒரு கேள்வி கேட்டு, முதலில் படியுங்கள், பின்னர் அரசியலில் ஈடுபடுங்கள் என அதட்டி அனுப்பினார்.'
மாணவர்களைக் கண்டிக்கும் ஆசிரியத் தனம் அவர் குரலில் காணப்பட்டது. கடசிவரை ரிக்கட் எடுக்கவேயில்லை.
முணுமுணுத்துக்கொண்டு வெளியேறினோம்.

அவர் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பாளர் எனும் பிம்பம் பதிந்தது. இன்னொரு வகையில் இவர் ஓர் தொழிலாள வர்க்கத் துரோகி என்ற எண்ணம் வந்தது.

மொத்தத்தில் தமிழ்த் துரோகி.

தொழிலாள வர்க்கத் துரோகி.

அன்றைய எங்கள் வயதுக்கேற்ற அனுபவத்திற்கேற்ற எடைபோடல் அது.
அன்று மட்டக்களப்பு பாராளுமன்றப் பிரதிநிதி செல்லையா ராஜதுரை. இராஜதுரையின் வருகையை ஆதரிக்காமல் படித்தவர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டும் எனக்கூறியவர்களுள் ஒருவர் பிறின்ஸ் காசிநாதர் ராஜதுரை பிறின்ஸ் காசிநாதரின் மாணவன் தமிழரசுக்கட்சி எதிர்ப்பாளரகவும் தமிழ்த் துரோகியாகவும் கம்யூனிஸ்ட் கட்சின் எதிர்ப்பாளராகவும் தொழிலாளவர்க்க விரோதியாகவும் பாராளுமன்றம் படித்தவர் செல்ல வேண்டிய இடமென்று கூறும் மேட்டுக்குடி மகனாகவும் துடிப்போடு செயற்பட்ட மட்டக்களப்பு இளஞர்களின் மனதில் அன்று ஆழப் பதிந்த இதே பிறின்ஸ் காசிநாதர் பாராளுமன்ற உறுப்பினரானதும், தொழிலாளி மக்களுக்காக குரல் கொடுத்ததும் தமிழர்க்காக வாதாடியதும்

மட்டக்களப்பின் சாதாரண மக்கள் பிரச்சனைகளுக்காக உயர் அதிகாரத்துடன் நேரடியாகவும் கடிதமூலமாகவும் போர் நடத்தியதும் ஒருவகையில் இடது சாரிச்சிந்தனைகள் கொண்ட ஈ பீ ஆர் எல் எப் எனும் கட்சியின் மட்டக்களப்புப் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்றதும் ஒரு முரண் நகை என்பதுடன் வரலாற்றின் விசித்திரங்களிலும் ஒன்று.

பிறின்ஸ் மட்டக்களப்பின் பாரம்பரிய நிலவுடமையாளர் குடும்பத்தில் வந்தவர். காசிநாதர் குடும்பம் என்பது மட்டக்களப்பில் அறியப்பட்ட குடும்பம்.
அவர்கள் முன்னோர்கள் சைவ மதத்தினர் பின்னாளில் அவர்கள் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவ மதம் சார்ந்தார்கள்..

பாரம்பரிய இரத்தமும் நவீன சிந்தனைகளும் பிரதேசப் பற்றும் கொண்டவராக இளம் வயதிலிருந்தே வளர்ந்து வந்தவர் காசிநாதர். ஆங்கிலம் அவருக்குப் பிடித்தமாயிற்று. .ஆங்கிலத்திலும் லத்தீனிலும் அவர் பாண்டித்தியம் பெற்றார்.
அக்காலத்தில் ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்றுவித்த சிறந்த நிறுவனம் மஹாறகம ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கலாசாலை. அங்கு பயின்று ஆங்கில ஆசிரியரானார் பிறின்ஸ் காசிநாதர்.

ஆங்கிலம் உலக மொழி என்பதிலும் அதனை அறிவதன் மூலமே உலகை அறியலாம் முன்னேறலாம்என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் தனது ஆங்கில ஆசான் பி,வி, கணபதிப்பிள்ளை என என்னையும் என் மனைவியையும் சந்திக்கும்போதெல்லாம் மறக்காமல் கூறி மகிழ்வார் பிறின்ஸ் காசிநாதர். பி,வி,கணபதிப்பிள்ளை எனது மாமனார்,
என் மனைவி சித்திரலேகாவின் தந்தையார். யாழ்ப்பாணம் வடமராட்சியில் அல்வாயைச் சேர்ந்தவர். பாரம்பரிய சைவ மதம் பேணிய குடும்பத்தில் பிறந்த இவர் பின்னாளில் போல் கணபதிப்பிள்ளை என நாமம் தாங்கிக் கிறிஸ்தவராகிப் பின்னர் மீண்டும் சைவரானவர்.

பேராசிரியர் சி. மௌனகுரு

இந்த போல் கணபதிப்பிள்ளை ஆங்கிலத்தில் வல்லவர். பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியில் அன்று வல்லாரிடம் ஆங்கிலம் பயின்றவர். அன்றே லண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியும் பெற்றவர் பின்னாளில் கொழும்பில் கொழும்பு மொழிபெயர்ப்புத் திணைக்களத்தில் பணி புரிந்தவர்

அவர் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கு ஆசிரிய நியமனம் பெற்று வந்தபோது பிறின்ஸ் காசிநாதருக்கு ஆரம்பத்தில் ஆங்கிலம் கற்பித்தார்.
அதன் மூலம் பிறின்ஸின் ஆங்கில ஆசிரியருமானார் அதனை பிறின்ஸ் காசிநாதர் ஒருபோதும் மறக்கவில்லை அடிக்கடி எங்கள் இருவரைக் கண்டதும் ஞாபகப்படுத்துவார்.

அயலில் இருப்பவரிடம் எனது ஆரம்ப ஆங்கில ஆசான் பி,வி கணபதிப்பிள்ளை சேர் எனக் கூறி மகிழ்வார்,

சிறந்த குரு பக்தி மிக்கவர் பின்னால் பிறின்ஸ் காசிநாதர் பற்றி நிறையவே அறிய முடிந்தது .அவரின் ஆங்கிலப்புலமையுடன் அவரது ஆங்கில எழுத்தாளுமை அவரது பிரதேசப்பற்று
மக்கள் நலநாட்டம், சாதாரண மக்களுக்கு உதவும் மனப்பாங்கு. .அடிமட்ட மக்களின் முன்னெற்றத்தில் அவர் கொண்டிருந்த தீவிரம், தமிழ் இஸ்லாமிய ஒற்றுமையில் அவருக்கிருந்த அக்கறை. ஒழுக்கமும் கட்டுப்பாடுமுள்ள மாணவர் சமூகத்தை உருவாக்குவதில் அவருக்கிருந்த வேகம். கல்வி கற்றோரைக் கனம் பண்ணும் அவரது உயரிய மனப்பாங்கு. போலித்தனமான உணர்ச்சிகரமான பேச்சுகள் மீது அவருக்கு இருந்த வெறுப்பு என்பன தெரியலாயின.

ஆசிரியராக இருந்த அதேவேளை அவர் ஒரு ஜேர்னலிஸ்ட்டாகவும் இருந்தார். அவர் மட்டக்களப்பு பற்றியும் முக்கியமாக அதன் இயற்கை அமர்வு சில வரலாற்று விடயங்கள் முக்கியமாக பாடும் மீன்கள் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

.அரிய ஆவணங்கள் அவரிடம் உள்ளன.

அவர் ஆரம்பத்தில் இடது சாரிக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டிருந்தார் என்பதும் லங்க சமசமாஜக் கட்சி ஆதரவாளராயிருந்தார் என்பதும் அக்கட்சி முக்கியஸ்தர்களான கலாநிதி என்,எம் பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் எனக்குப் பின்னால் தெரிய வந்த செய்திகள். இவற்றை நான் அவர் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் பதிந்துள்ளேன் அவர் ஆசிரிய தொழிற்சங்கத்திலும் அதன் செயலாளராகப் பணி புரிந்தவர்.


இவர்தானா எங்களைப் பார்த்து நீங்கள் கம்யூனிஸ்ட்களா? என வெறுப்புடன் கேட்டார் என நாம் பின்னாளில் கதைத்தும் கொண்டோம். அவரைப்பற்றிய எமது பிம்பமும் மாறலாயிற்று அவர் எமக்கு நெருக்கமானார், 1978 இல் மட்டக்களப்பில் பெரும் சூறாவளி வந்து மட்டக்களப்பையே தலைகீழாக்கி விட்டது. அலமந்து போயினர் மட்டக்களப்பு மக்கள்.
நாம் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பித்துக்கொண்டிருந்தோம். அங்கிருந்து இங்கு நாம் பல சிரமங்களுக்கு மத்தியில் ஒரு பெரும் குழுவாக வந்தோம். உடைந்து தகர்ந்து கிடந்த மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கூரையில் மாணவர்களுள் ஒருவராக நின்று ஓடு போட்டுக்கொண்டு வெற்று மேலுடன் ஓர் தொழிலாளியாகக் காட்சி தந்தார் பிறின்ஸ் காசிநாதர். 1989 இல் அவர் ஈ;பீ ஆர் எல். எப் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டமை அவரை நன்கறிந்த எம்போன்றோர்க்கு மிகுந்த ஆச்சரியம் அளித்தது. அவர் மட்டக்களப்பின் எம் பி ஆனார். அக்காலம் மிகவும் மோசமான காலம் பலரை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. ஒருபக்கம் போராளிகள் இராணுவம் மறுபக்கம் அரசாங்க இராணுவம்முக்கியமாக இந்திய இராணுவம், இரு பக்கத்திலும் அவரது மாணவர்கள் இருந்தனர்.

அதனைப்பயன்படுத்தி தன் மக்களுக்காக அவர் வேலை செய்தமையை இன்றும் பலர் நினைவு கூர்வர். தன் ஆளுமையினால் அவர் அனைவரையும் வென்றார் எப்போதும் அவர் மக்கள் பக்கத்தில் நின்றார். அழகான ஆங்கிலத்தில் அறுத்து உறுத்துப்பேசுவார். அவர் பேச்சில் எப்போதும் நகைச்சுவை இழையோடும் கிண்டல் நிறைந்திருக்கும், அவருடன் யாரும் முண்டமாட்டார்கள். அவரோடு வாதிடுவதும் முரண்டுவதும் எதிர்வாதம் புரிவதும் எனது மனைவியார் சித்திரலேகாதான். சில வேளை தர்க்கம் உச்சக்கட்டம் சென்று விடுவதும் உண்டு.

"தகப்பனைப்போல இருக்கிறாள் என்று கூறி" :மகள் இந்த துணிவு எனக்குப்பிடிக்கிறது,,இதை விட்டு விடாதே"என்று உற்சாகப்படுத்தி "என் ஆசிரியரின் பிள்ளை"என மற்றவர்க்கும் சித்திராவை அவர் அறிமுகம் செய்யும் பாங்கு இன்றும் மனதை நிறைக்கிறது.
மட்டக்களப்பில் அவர் பலரதும் எதிர்ப்புகளைச் சம்பாதித்தவர்., எனினும் அவரிடம் மிக மோசமாக ஏச்சு வாங்கி அடி வாங்கி படித்தவர்கள்தான் அவரின் மிக நெருக்கமானவர்களும் ஆனார்கள்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# இளைப்பாறுங்கள் பேராசானே!



இன்று மாலை Viber இல் Our God Father, icon of our school, Prince sir passed away. May his soul rest in peace என்ற செய்தியை கோபி எமது பாடசாலையின் பழைய மாணவர்களுக்கான உரையாடற் குழுமத்திற் பதிந்திருந்தார்.

பெரும் கனதியொன்றை மனது உணர்ந்தாலும், அவருக்கு இப்போது வேண்டிய ஆறுதலை அவரது மரணம் வழங்கியிருக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அதுவே அவருக்கு காலம் இன்று வழங்கக்கூடிய அதியுர் பரிசு.

கடந்த புரட்டாதி மாதம் எனதாசானின் படுக்கையறையில் முதுமையின் சகல வாசனைகளுடனும் நின்றிருக்கையில், எழுந்து நடமாட முடியாத நிலையில், என் கையைப்பற்றி "சஞ்சயன், என்னை நீங்கள் எல்லோரும் மேலும் மெலும் கடனாளியாக்காதீர்கள்" என்று கண்ணீரால் என் கைகளை நனைத்தார்.

பலதடவைகள் கேட்ட வார்த்தைகள் அவை. என்னிடம் அவரது வேண்டுகோளுக்கு ஒரே ஒரு பதில்தான் இருக்கிறது. அதுவும் அவர் பல முறைகேட்டதுதான். "சேர், நீங்கள் இல்லாவிட்டால் நாம் இன்று இப்படி இல்லை" என்பதுதான் அது. "போடா" என்ற அவரது அன்பான வார்த்தைகளின்போது அவரது கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

ஆசிரியத்தின் மகத்துவத்தை அவரிடம்தான் கற்றுக்கொண்டேன். ஒரு நாள், அவருக்கு ஆண்குழந்தைகள் இல்லையே என்று மனம்வருந்தி, அவர் தனது மனைவியிடம் கூறியபொழுது, 'பிரின்ஸ், பொய் கதைக்காதே, உன்னளவுக்கு ஆண்குழந்தைகளைக்கொண்ட மனிதர்கள் இந்த உலகத்தில் மிகக்குறைவு. உன் மாணவர்கள் உன்னைத் தாங்கி, கொண்டாடுவதை தினமும் பார்ப்பவள் நான்', என்றாராம் அவரது துணைவியார். ஆம், அது உண்மைதான்.

இப்பெரும் ஆளுமைக்கும் எனக்குமான உறவு 42 வருடங்களைக்கொண்டது. 1976, தைமாதம், எம் வகுப்பில் இணைந்தபோது ஏற்பட்ட உறவு. பாடசாலை வாழ்வு முடிந்தபின்பும் 34 ஆண்டுகளாக மிக நெருக்கமாக ஆசானும் மாணாக்கனாயும் வாழ்ந்திருந்த காலம் இன்றுடன் முடிந்திருக்கிறது. ஐம்பத்தி மூன்று வயதிலும் ஒரு ஆசானின் இழப்பு என்னை விக்கி விக்கி அழவைத்திருக்கிறது. இந்த மனிதருக்கு எமது கல்லூரியின் மாணவர்கள் நாம் என்றென்றும் நன்றியுடையவர்கள் மட்டுமல்ல, பெரும் கடமைப்பட்டவர்கள். அவர் வழி நடப்பதே நாம் அவருக்காற்றும் பெரும்பணி.

ஒரு மாணவனுக்கு ஒழுக்கம், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு எத்துணை முக்கியம் என்பதை மிகவும் கண்டிப்புடன் தனது மாணவர்களுக்கு புகட்டியவர், அவர்.

சில வருடங்களுக்கு முன் ஒரு நாள், நண்பர்கள் சூழ அவருடன் அரட்டையடித்துக்கொண்டிருந்தோம். அவர் எங்களுக்கு அடித்த முறைகள், தண்டிக்கும் முறை என்பதுபற்றி பேச்சுத் திரும்பியது. நான் அவர் மோட்டார் சைக்கிளில் வரும்போது பாடசாலைக்கருகில் வந்ததும் அவர் வானத்தின் இயந்திரத்தை நிறுத்தி, பூனையின் பாதங்களின் ஒலியுடன் எமது பாடசாலை விடுதிக்குள், மதிலால் ஏறிப்பாய்ந்து புகுவதையும், விளையாடித்திரியும் எம் கன்னங்களை பழுக்கவைத்ததையும், ஒரு நாள் ராஜேஸ்வரா தியட்டர் வாசலில் தனது வாகனத்தை நிறுத்தி, எமக்காகக் காத்திருந்து, அதே வாகனத்திலேயே ஏற்றிவந்து, எமது கன்னங்களை பதம்பார்த்ததையும் கூறியபோது, 'இத்தனை கொடுமையாக, இதயமற்று நடந்த ஒரு மனிதனை, வயதான காலத்தில் உங்கள் குடும்ப உறுப்பினர்போன்று தாங்கும் உங்களை பெற நான் என்ன நன்மை செய்தேன் என கர்த்தரைக் கேட்கவேண்டும்' என்று கூறி, கண்கலங்கினார்.

பாடசாலைக்காலத்தில் இருந்த பயம், மரியாதை என்பவற்றை காலம் மெதுமெதுவான மணலில் உள்ள தடயங்களை காற்று அழிப்பதுபோன்று அழித்தபின், நாம் நண்பர்கள் போலானோம். அவருடன் எதையும் பேச முடிந்தது. பகிடிவிட முடிந்தது. வாழ்க்கையின் அயர்ச்சியை ஒப்படைத்து அழ முடிந்தது. அவரும் அப்படியே. எப்போது நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வந்தாலும் அவரைச் சந்திக்காது சென்றதில்லை. அவருடனாக சந்திப்பு மனதுக்கு மிகவும் நெருக்கமானது. நேரகாலமின்றி நுளம்புக்கடிகளையும் தாங்கியபடி உரையாடிய பொழுதுகள் மிக அற்புதமானவை. அவரது நகைச்சுவை அத்தனை அலாதியானது.

இன்றைய சமூகத்தில், "நாம்" என்ற சிந்தனை அகன்று, "நான்" என்ற சிந்தனை பெரும்பான்னையினரின் சிந்தனையில் உருக்கொண்டிருப்பதையிட்டு மிகவும் வருந்தினார். அவரது காலத்தில் Path finders என்றவொரு இயக்கத்தினை எமது கல்லூரில் நிறுவி பல சமூகச்செயற்பாடுகளை மாணவர்களின் ஊடாகச் நடைமுறைப்படுத்தியவர் அவர்.

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையை சுத்தப்படுத்திய நாட்களை நினைத்துப்பார்க்கிறேன். 'நீ ஒரு சமூகப் பிராணி, எனவே என்றும் சமூகத்திற்கு பிரதியுபகாரமாய் இரு' என்னும் கருத்தியலை எங்கள் நெஞ்சிலறைந்த பெருஞ் சமூகச்சிந்தனையாளன் அவர்.

அவர் எமது சமூகத்தில் வகித்த பதவிகள் ஏராளம், அற்புதமான ஆங்கில ஆசிரியன், உப அதிபர், அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் (த.வி.கூ அமிர்தலிங்கத்தை தோற்கடித்தவர்), இலங்கைப் பாராளுமன்றத்தின் பேச்சாளர், பிரசைகள் குழுத்தலைவர், போக்குவரத்துச் சபை நிர்வாக உறுப்பினர், மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினர், ஆசிரியர் சம்மேளனத்தின் தலைவர் என்று அவர் சமூகத்தில் பெரும் பதவிகளை வகித்தவர்.

இத்தனை பெரும் பதவிகளை வகித்த ஒரு மனிதன் இறுதிக்காலத்தில் வறுமையில் வாடினார் என்பதை அவருக்கு மிக நெருக்கமான ஒரு சிலரைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார்கள். இது ஒன்றே அவரது நேர்மைக்குச் சான்று.

எவராயினும் நியாயத்தின் பக்கம் நில் என்று எமக்குக் கற்பித்தவர். 70களில் ஒருநாள் அந்நாள் மட்டக்களப்பின் நாயகனான பாராளுமன்ற உறுப்பினர் ராஜன் செல்வநாயகம் எமது பாடசாலைக்கு ஒரு கட்டடத்தை கட்டித்தந்துகொண்டிருந்த காலம். அன்று மதியம்போல் ராஜன் செல்வநாயகம் எமது பாடசாலைக்கு வந்தார். அதிபரைச் சந்திக்காது நேரடியாக கட்டடத் தொழிலாளிகளைப் பார்த்து ஏதோ கட்டளையிட்டுக்கொண்டிருந்தார்.

**சஞ்சயன் செல்லமாணிக்கம்**

'குட்மோர்னிங் ராஜன் செல்வநாயகம், இது எனது பள்ளிக்கூடம். இங்கு எனது அனுமதி இன்றி எவரும் வரமுடியாது' என்றார் பிரின்ஸ் சேர். 'மன்னியுங்கள், தவறு என்னுடையது' என்றுவிட்டு அனுமதி பெற்றுக்கொண்டார் ராஜன் செல்வநாயகம். அன்று மதியம் அவர்கள் இருவரும் கன்டீனில் பிளேன் டீ குடித்துக்கொண்டிருந்தது வேறுகதை. பெரு மனிதர்கள் பண்புகளை உணர்த்திய சம்பவம் அது.

இலங்கைப் பாராளுமன்றத்தின் பேச்சாளராக இங்கிலாந்து சென்றிருந்தபோது, தனது அதிபர் காட்மன் அவர்களை சந்திக்கச் ஒப்பந்தம் செய்திருந்தார். அதே நாள் அதே நேரம் இங்கிலாந்தின் பாராளுமன்றப் பேச்சாளர் இவரை தேனீர் விருந்திற்கு அழைத்தருக்கிறார். "மன்னியுங்கள், நான் எனது ஆசானுடன் தேனீர் அருந்துவதற்கு சம்மதித்திருக்கிறேன். என்னால் இன்று உங்கள் அழைப்பை ஏற்கமுடியாது" என்றிருக்கிறார்.

எவராகினும் அஞ்சாது நியாயத்தையும் உண்மையையும் பேசு என்று எனக்குக் கற்றுத்தந்தவர். அதையே, அவரது சேவைக்கான பாராட்டுவிழாவில், பாடசாலையின் நன்மைக்காக, அவரையும் வேறுசிலரையும் குறிப்பிட்டு உரையாற்றியிருந்தேன். நான் உரையாற்றி முடிந்ததும் "மாலை வீட்டுக்கு வா" என்றார். மனிதருக்கு எனது உரை பிடிக்கவில்லை என்பது மட்டும் புரிந்தது. அன்று மாலை, ஏன் அப்படி அத்தனை மனிதர்களுக்கு முன்னால் உரையாற்றினாய் என்றபோது " நியாயத்தை, உண்மையை அஞ்சாது பேசு என்று எனது பேராசான் கற்பித்திருக்கிறார்" என்றேன். அவரது மந்தகாசமான புன்னகையில அத்தனை பெருமையிருந்தது. அன்பாக முதுகில் தட்டித்தாந்தார்.

1960, 1970, 1980களில் கிழக்கிழங்கையில், வடக்கே மூதூரில் இருந்த தெற்கே அம்பாறைவரையில் வாழ்ந்திருந்த இஸ்லாமிய சமூகத்தினருக்கு மட்டக்களப்பில் எந்தவொரு கல்லூரியும் இலகுவில் அனுமதியளிக்காத காலத்தில், எமது பாடசாலை விடுதியிலும், பாடசாலையிலும் இடமளித்து இரு சமூகங்களிடையேயும் ஒற்றுமையையும், கல்வியின் அவசியத்தையும் புரியவைத்தவர் அவர். அதன் காரணமாக அவர் சந்தித்த இடர்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இருப்பினும் தனது கருத்தில் இருந்து சற்றேனும் அவர் மாறவில்லை. எமது கல்லூரியின் 200ம் ஆண்டு நிறைவின்போது நடைபெற்று ஊர்வலத்தின்போது இஸ்லாமிய சமூகத்தினரின் கிராமங்களில், நரங்களில் அவருக்குக் கிடைத்த ஆரவாரமான வரவேற்பு அவரது சேவைக்கு சான்றாகும்.

சேர், உங்களின் இறுதியாத்திரைக்காக இன்று புறப்படுகிறேன். உங்களால் உருவான பலர் உலகெங்கும் இருக்கிறார்கள். இன்று எனக்கு கிடைத்த தொலைபேசி அழைப்புக்களும், குறுஞ்செய்திகளும் நீங்கள் இறக்கவில்லை, அவர்களின் மனதில் ஒளிர்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை உணர்த்துகிறது.

"உமது ஒளியில் ஒளியுண்டு" என்பது எமது பாடசாலையின் வாசகம்.

என்னைப் பொறுத்தவரையில் இது உங்களுக்காவே எழுதப்பட்ட வாசகங்கள்.


சென்றுவாருங்கள் எங்கள் பேராசானே. நாம் பின்னே வருகிறோம்.

விளம்பரம்



# அன்றும் இன்றும் - அங்கம் 01

## பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் பல பொன்னான வேலைகளும் தூங்குதப்பா!



உலகம் தோன்றிய காலத்திலிருந்து பார்ப்போமேயானால், வனாந்தரமயமாதல், பாலைவனமயமாதல், வறட்சிமயமாதல், வெப்பமயமாதல், கிராமமயமாதல், நகரமயமாதல் முதலான பரிணாம வளர்ச்சியும், இவை தொடர்பான சிந்தனையும் மேலோங்கியிருந்தன.

கடந்துவிட்ட சில நூற்றாண்டுகளிலிருந்து பார்த்தால் உலகமயமாதலும் பேசுபொருளாகிவிட்டது. இதற்கு தேசங்கள் பலியாகியிருப்பதை காணமுடிகிறது.

சமூகத்தில், மதங்களில், நோய் உபாதைகளில், வெகுஜன அமைப்புகளில், உள்நாட்டு மற்றும் உலக அரசியலில் மாற்றங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அன்று நாம் வாழ்ந்த வாழ்க்கை இன்றில்லை. இன்று நாம் அனுபவிக்கும் வாழ்க்கை அன்றிருக்கவில்லை.

"கல்தோன்றி மண்தோன்றாக்காலத்திற்கு முந்திய இனம் தமிழினம்" என்று தொடர்ச்சியாக ஒரு வாய்ப்பாடாகவே சொல்லிவருகிறார்கள். எம்மத்தியில் முன்னர் வாழ்ந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் - "எஸ்.பொ." என நன்கு அறியப்பட்ட எஸ்.பொன்னுத்துரை, ஒரு சந்தர்ப்பத்தில், " இந்த மூத்த தமிழ்க்குடிமக்கள், கல்தோன்றி மண்தோன்றாக்காலத்திற்கு முன்னர் பிறந்திருந்தால், மலம் கழிப்பதற்கு எங்கு சென்றார்கள்...? " என்று அங்கதமாகக்கேட்டார்.



பெருந்தலைவர் காமராஜர்

ஒவ்வொரு இனக்குழுமத்தின் தோற்றத்திற்கும் வாழ்விடங்களுக்கும் இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகளுக்கும் வரலாறு இருக்கிறது.

அண்மைக்காலத்தில் இலங்கையிலும் அண்டைநாடான இந்தியாவிலும் மற்றும் உலக நாடுகளிலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களை பார்க்கும்போது, கடந்துவிட்ட இருபதாம் நூற்றாண்டு காலத்தில் நடந்த சம்பவங்களும் மனதில் துளிர்க்கின்றன.

மக்களின் நினைவு மறதி யாருக்கு இலாபம்? என்று யோசித்தேன். உடனடியாக நினைவுக்கு வந்தவர்கள் அரசியல்வாதிகள்தான்!

கடந்த ஒக்டோபர் மாதம் இறுதியில் இலங்கையில் திடீரென்று ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் ஊடகங்களுக்கும் முகநூல்கார்களுக்கும் பெரிய கொண்டாட்டமாகிவிட்டது.

ஹெலிகொப்டரில் வந்து நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளும் ஒரு பிரதமருக்கும், அலரிமாளிகையை விட்டுச் செல்லமாட்டேன் என தனது உரிமையை விட்டுக்கொடாமல் அடம் பிடிக்கும் ஒரு பிரதமருக்கும் மத்தியில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டுக்கான காரணங்களை வலியுறுத்திவருகிறார்.

மக்களின் வாழ்க்கைத்தரம் பற்றி பேசவேண்டியவர்கள் நாட்டின் அதிபரது உளநலம் குறித்த மருத்துவசோதனை பற்றி பேசுகிறார்கள்!

தேசத்தில் மக்களின் வாழ்க்கைச் செலவீனங்கள் உயர்ந்துகொண்டிருக்கிறது. நாணயப்பெறுமதி தாழ்கின்றது. பணவீக்கம் அதிகரிக்கிறது.

"நாடாளுமன்றில் மிளகாய்த்தூளுக்கும் கத்திக்கும் என்ன வேலை? அங்கு சமையலா நடக்கிறது?" என்றும் நாடாளுமன்ற வாசலில் இருந்து ஒரு வியாபாரி அவற்றை வைத்துக்கொண்டு "லாபாய், லாபாய்" (மலிவு - மலிவு) என்று கூவி அழைத்து விற்பனை செய்வதாக கேலிச்சித்திரங்களும் முகநூல்களிலும் ஊடகங்களிலும் பதிவாகின்ற காலத்தில் வாழும் மக்கள், முன்னர் இருந்த அரசியல் தலைவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை நினைத்துப்பார்த்து நனவிடை தோய்கின்றனர்.

ஒரு பிரதமர் ஹெலிகொப்டரில் வந்திறங்குவதற்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற கேள்விக்கும் பதில் கிடைக்கிறது! அலரிமாளிகையில் திரளாக குழுமியிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி தொண்டர்களின் சாப்பாடு குளிர்பானச்செலவுக்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? என்ற கேள்விக்கும் பதில் கிடைக்கிறது!

காலிமுகத்திடலுக்கு முன்பாக அமைந்திருந்த முன்னைய நாடாளுமன்றத்திற்கு தகநாயக்கா என்ற முன்னாள் அமைச்சர் (இவர் பிரதமராகவும் இருந்தவர்) இலங்கை போக்குவரத்துச்சபையின் பஸ் வண்டியில் வந்து போயிருக்கிறார்.

அவருக்கு முன்னாலும் பின்னாலும் மெய்ப்பாதுகாவலர்கள் செல்லவில்லை.

காலி தொகுதியில் அவருடைய வாசஸ்தலத்திலிருந்த தொலைபேசியை அவர் பயன்படுத்தியதைவிட ஊர் பொதுமக்கள்தான் அதிகம் பாவித்தனர். இது பற்றியும் நாடாளுமன்ற பட்ஜட் விவாதத்தில் அன்று பேசப்பட்டது.

"என்னை தெரிவுசெய்த மக்களுக்கு, அரசு தரும் தொலைபேசி வரப்பிரசாதத்தையும் கொடுத்துள்ளேன்" என்பதுதான் அவரது தரப்பு வாதமாக அன்று இருந்தது.

இவ்வாறு ஒரு சாதாரண குடிமகன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரது வாசஸ்தலத்தின் தொலைபேசியை பயன்படுத்துவதற்கு இன்றைய காலத்தில் முடியுமா?

இன்று முகநூலிலும் ட்விட்டரிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி தங்கள் கருத்துக்களை உடனுக்குடன் பதிவிடுவதற்கு முடிகிறது.

இந்த வாய்ப்பும் வசதிகளும் இதே பதவிகளில் முன்னர் அமர்ந்திருந்தவர்களுக்கு கிடைத்ததா?

தமிழ்நாட்டில் காமராஜர் என்ற பெயரில் ஒரு முதலமைச்சர் இருந்தார். அவர் அந்தப்பதவியை ஏற்றதும், அவர் பயணித்த வாகனத்திற்கு முன்பாக காவலர்கள் மற்றும் ஒரு வாகனத்தில் சைரன் ஒலியை எழுப்பியவாறு சென்றார்கள்.

அந்தச்சத்தம் என்ன? என்று கேட்ட முதல்வர் காமராஜர், தான் பயணித்த வாகனத்திலிருந்து இறங்கி, அந்தக்காவலர்களை அழைத்து "

**ரஸஞானி**

உங்களுக்கு வேறு வேலை கிடையாதா? எனக்கு மக்களை சந்திப்பதற்கு எப்படிச்செல்லவேண்டும் என்பது தெரியும். நீங்கள் சென்று உங்கள் பொலிஸ் நிலையங்களில் மக்களுக்கு செய்யவேண்டிய பணிகளை கவனியுங்கள்" எனச்சொல்லி விரட்டிவிட்டார்.

அவரது தாயார் சிவகாமி அம்மையார் விருதுநகரிலிருந்து சென்னைக்கு அரசு பேரூந்தில்தான் வந்தார். முதல்வரான மகனது சுகநலன் விசாரிக்க வந்த அந்த மூதாட்டியை பார்த்துப்பேசியதன் பின்னர் அரசு பேரூந்திலேயே திருப்பி அனுப்பியவர் கர்மவீரர் பெருந்தலைவர் காமராஜர்.

இதுபோன்ற சம்பவங்கள் சுற்காலத்தில் நடக்கவில்லை! நாம் கடந்துள்ள இருபதாம் நூற்றாண்டில்தான் நடந்திருக்கின்றன.

இலங்கையில் தம்புள்ள தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் சமூக சேவைகள் மற்றும் கலாசார அமைச்சராகவும் பதவி வகித்த டீ. பி. தென்னக்கோன் கவிஞராகவும் அறியப்பட்டவர். எளிமையாக வாழ்ந்த இவர், தேர்தலில் தோற்றபின்னர், தனது ஊரில் பஸ் நிலையங்கள் - பொதுச்சந்தைகளின் முன்பாக தான் எழுதிய கவிதைகளைப் பாடி அந்த கவிதைகளின் பிரசுரங்களை பொதுமக்களுக்கு சதங்களுக்கு விற்று வாழ்க்கையை கடந்தவர்.



கலாநிதி விஜயானந்த தகநாயக்கா

அவரை கவிகொலகாரயா என்றும் மக்கள் அன்று செல்லமாக அழைத்தனர். ஏழை மாணவர்களுக்கு மதிய உணவாக பணிஸ் வழங்கிய கல்வி அமைச்சர் தகநாயக்காவை அன்று பணிஸ்மாமா என்று அழைத்தனர்.

இன்று, நாடாளுமன்ற உறுப்பினர்களை செத்தல் மிளகாய் வியாபாரி என்று அழைப்பதா? பட்டாக்கத்தி பைரவன் என்று அழைப்பதா?

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் மக்களின் வரிப்பணத்தில் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்கின்றனர். அவர்கள் செல்லும் நாடுகளில் எவ்வாறு அரசு இயங்குகிறது? மக்களின் வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது? என்று பார்க்கமாட்டார்களா?

இலங்கையில் நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் இயங்கும்போது நாளொன்றின் செலவுகள் எவ்வளவு என்பதற்கு பதில் இருக்கிறது. பன்முக வரவு செலவுத்திட்டம் அறிவிக்கப்படும்பொழுது, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு என்ற கேள்விக்கும் பதில் இருக்கிறது.

ஆனால், அந்த நிதி எவ்வாறு உரியமுறையில் மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது? என்ற கேள்விக்கு பதில் இருக்கிறதா?

இவ்வாறு அன்றும் இன்றும் தொடரும் கேள்விகளுக்கும் பதில்களுக்கும் மத்தியில் பொதுமக்களின் நினைவாற்றல் குறித்து அதே மக்களால் தேர்வுசெய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எள்ளவும் கவலை இல்லை.

அன்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய "பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் பல பொன்னான வேலைகளும் தூங்குதப்பா" என்ற பாடல் வரிகளும் இன்று நினைவுக்கு வருகின்றது.

(தொடரும்)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## எம்மைப்பார்த்து பரிதாபம் சொல்லாதீர்கள் ஆதரவு தாருங்கள்

'எம்மைப்பார்த்து பரிதாபம் சொல்லாதீர்கள் ஆதரவு தாருங்கள்' என்ற ஓசையொன்று கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் அண்மையில் எழுந்ததாக மலரவனும், முருகையனும் பட்டிப்பளைச் சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் அண்மையில் பல இடங்களில் அனுஸ்டிக்கப்பட்டது. அந்நிலையில் தான், மண்முனை தென்மேற்கு பிரதேசத்திலும் உதய ஒளி மாற்றுத்திறனாளி அமைப்பினால் கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளி அமைப்பின் உறுப்பினர் ஒருவர் உரையாற்றுகின்ற போது, நாம் பலர் பிறக்கும் போதே மாற்றுத்திறனாளிகள் அல்ல. வாழும்போதே சந்தர்ப்பசூழல் எம்மை மாற்றுத்திறனாளிகளாக மாற்றியிருக்கின்றது. அதற்காக எம்மைப்பார்த்து பரிதாபம் சொல்லாது, ஆதரவு தாருங்கள் என்ற கருத்தினையும் முன்வைத்திருந்தாக கூறிய மலரவன் அக்கருத்தின் ஆழத்தினையும் முருகையனுக்கு விளக்க ஆரம்பித்தான்.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் 600க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இருப்பதாக கூறப்படுகின்றது. மாற்றுத்திறனாளிகள் என்போர் பிறக்கும் போதுமட்டும் உருவாக்கப்பட்டவர்கள் அல்லர். வாழும் போது சந்தர்ப்பசூழல்கள் மாற்றுத்திறனாளிகளாக பலரை உருவாக்கியிருக்கின்றன. குறிப்பாக கடந்த மூன்று தசாப்த யுத்தம் பலரை மாற்றுத்திறனாளிகளாக்கியிருக்கின்றது. அதேவேளை இயற்கை அனர்த்தம், எதிர்பாராத விபத்துக்கள், நோய்கள் என்பனவும் மாற்றுத்திறனாளிகளை உருவாக்கியுள்ளன. இவர்கள் அனைவருமே சமுகத்தின் வளர்ச்சிக்கு மிக அவசியமானவர்கள், அதேவேளை சமுக அந்தஸ்தும் உள்ளவர்கள். மற்றவர்களைவிட பல விடயங்களில் சாதிப்பவர்களாகவும், பல திறன்களை கொண்டவர்களாகவும் சமுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால்தான் இவர்களுடைய தேவைகளை சர்வதேசமும் உணர்ந்து, மாற்றுத்திறனாளிகளை வலுவூட்டல் மற்றும் உள்வாங்கல் போன்றவற்றுடன் சமத்துவத்தினையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தி வருகின்றது.

பாடசாலைக்கல்வி தொடக்கம் வேலைத்தளம் வரை இவர்களுக்கு சமத்துவம் வழங்கப்படவேண்டும் என்ற கோட்பாடு இலங்கைநாட்டிலும் உள்ளது. அதேவேளை நாட்டின் அபிவிருத்திசார் செயற்பாடுகளில் இவர்களது பங்கும் அளப்பரிதாக வேண்டும். அளப்பரிதாகியிருக்கின்றது என்பதும் தொடர்பேச்சுக்களாக உள்ளன. மாற்றுத்திறனாளிகளாக

**படுவான் பாலகன்**

இருக்கின்றவர்களும் தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறரின் வெறுப்புக்கு ஆளாகிவிடக்கூடாதென்பதில் உன்னிப்பாக கவனம் செலுத்தி வருகின்றனர். தாமும் பிறரைப்போன்று வாழ்க்கையிலும் சொந்த காலில் நிற்க வேண்டுமென நினைக்கின்றனர். ஆனபோதும் நம்சார்சூழல் இடம்கொடுக்கவில்லை. இதற்கு பொருளாதார ரீதியில் நம் பிரதேசம் பின்நிலை வகிப்பதும் மிக முக்கியகாரணமே. குறிப்பாக வாழ்க்கையின் ஒரு நாள் பொழுதினை கழிப்பதில் அன்றாடம் சவால்களை எதிர்கொள்கின்றவர்களாக படுவான்கரைப்பகுதி மக்கள் உள்ளனர். இவ்வலையில் மாற்றுத்திறனாளிகளும் சிக்கியிருக்கின்றனர். இதற்கு நிரந்தர தொழில்வாய்ப்பின்மையும் முதலீடு இன்மையும் சிக்கலானதொன்றாகவே இருந்து வருகின்றன. இதனால்தான் ஆதரவுக்காக படுவான்கரைப்பிரதேசம் பலரையும் எதிர்பார்த்திருக்கின்றது.

'வழிதெரியாமல் ஒருவர் தடுமாறுகின்ற போது, வழிதெரியாமல் தடுமாறுகின்றாரே! என பரிதாபப்படுகின்ற நிலையே பல இடமும் காணப்படுகின்றது. இதனால் பலர் பரிதாபவப்படுகின்றவர்களாவே இருக்கின்றனரே தவிர, வழியைச்சொல்லி ஆதரவுகொடுத்து வழியனுப்புகின்றவர்களாக இல்லை' என்ற கருத்தினை மலரவனும் கூற, முருகையனும் தொடர்ந்தான். உண்மையில் நாம் அன்றாடம் காண்கின்ற உண்மையும் இதுவே, ஒற்றைக்கால் இல்லாத ஒருவர் படியொன்றில் ஏறும் போது, சிரமங்களை எதிர்கொண்டு நிற்கையில், சிலர் அவரைப்பார்த்து ஏறமுடியாமல் தவிக்கின்றாரே என கவலையுறுகின்ற, பரிதாபம் கொள்ளுகின்ற தன்மையினையே அதிகம் காணமுடிகின்றது. அவரின் கையைப்பிடித்து, படியில் ஏற்றுவதற்கு முயல்வதில்லை. அவ்வாறில்லாமல் அவர் வீழ்ந்தபின் அவ்விடம் ஓடிச்செல்வதுதான் சமுகத்தில் இன்று அதிகம் நடந்தேறிவருகின்றது. இதனை மாற்றுத்திறனாளி அமைப்பின் உறுப்பினரும் நன்கு உணர்ந்திருக்கின்றார். இதன் காரணமாகத்தான் 'பரிதாபம் சொல்லாதீர், ஆதரவு தாரும்' எனக்கேட்டிருக்கின்றார் என்றான் முருகையின்.

தட்டிக்கொடுப்பதைவிட தட்டிக்கழிப்பதிலே கரிசனை கொள்ளும் தற்போதைய சூழலில், மாற்றுத்திறனாளிகளாக நிற்கின்ற உறவுகளும், குடும்ப வாழ்க்கையில், சிரமமின்றி வாழ்வதற்கு அவர்களுக்கான சிறந்ததொரு ஆதரவினை கொடுப்பதற்கு முன்வரவேண்டும். அவர்களுக்கான சிறப்பான ஆதரவு அவர்கள் இன்னும் பலருக்கு ஆதரவு கொடுக்கக்கூடியதாக அமைய வேண்டும். பரிதாபம், பரிவு மனதில் இருந்தாலும், செயற்பாட்டில் ஆதரவும், கைகொடுப்புமே ஒருவரை உயர்த்திச் செல்லும் என்று மலரவனும் கூறி முடிய, நேரம் செல்வதாக கூறிவிட்டு கொக்கட்டிச்சோலையை நோக்கி மலரவனும், பட்டிப்பளையை நோக்கி முருகையனும் சென்றனர்.


விளம்பரம்



IBRAHIM EATING HOUSE
74A, MAIN STREET, BATTICALOA
T.P : 0777 588 427,
0771 558 883

சுகல விதமான வைபவங்களுக்கும் மன நிறைவான உணவுகளை எங்களிடம் ஓடர் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

RIYAS MULTY CORNER
BEACH ROAD, KATTANKUDY
DEALER IN ELECTRONIC ITEMS, MOBILE PHONES, PERFUMES AND COMPUTER ETC...



அனைத்து விதமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இலத்திரனியல் சாதனங்களும் வாங்கி விற்கப்படும்.
T.P : 0777 419 000, 0779 687 474


## மட்டக்களப்பில் இரு நூல் அறிமுக விழா




இலங்கை சைவநெறிக் கழகத்தால் கடந்த ஒக்டோபர் மாதம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் வெளியிடப்பட்ட இரு நூல்களான சிவப்பிரகாசக் கதவம் மற்றும் அலகிலா ஆடல் ஆகிய இரு நூல்களின் நூல் அறிமுக விழாவானது, எதிர்வரும் 29 டிசம்பர் 2018 (சனிக்கிழமை) அன்று மாலை 3.30 மணி அளவில் மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற இருக்கிறது.

இவற்றில். 'சிவப்பிரகாசக் கதவம்' நூலானது, சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் சிவபாலகணேசன் அவர்களாலும், 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' நூலானது, கழகத்தின் பொதுச்செயலாளர் திரு.வி. துலாஞ்சனன் அவர்களாலும் எழுதப்பட்ட நூல்கள் ஆகும்.

'சிவப்பிரகாசக் கதவம்', சிவப்பிரகாசம் எனும் சித்தாந்த நூலின் நோக்கில் சைவ மெய்யியலை விளக்கும் நூலாக அமைய, 'அலகிலா ஆடல்' வரலாறு மற்றும் தர்க்கரீதியான ஆய்வு முறையில் சைவத்தின் வரலாற்றை விவரிக்கும் நூலாக விளங்குகின்றது.

கொழும்பு மற்றும் கிழக்கிலங்கையின் முக்கிய தமிழ் பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். சைவம், வரலாறு ஆகிய இரு துறைகளிலும் ஆர்வமுள்ளோர் இந்நிகழ்வுக்கு அன்போடு அழைக்கப்படுகிறார்கள்.


Now Enrolling
NCL
NELSON COLLEGE LONDON
Are you 18+
CALL US
Business Course:
0208 514 0033
Hospitality Management:
0203 500 0239
Why Us
We provide:
• One to One support
• Flexible Timetable
• National and international course-based events & tours
• Employer introduction
• Job placement
Courses
• HND Business
• HND Hospitality Management
• BA (Hons) Top Up in Business
• BA (Hons) Top Up in Hospitality Management
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556


NIRUTHA
HOTEL
NIRUTHA
E-mail: info@hotelnirutha.com
Hotline: +94 717 412 292
அரங்கம் செய்திகளுக்கான
ஆதரவில் கைகோர்ப்போம்' -
ஹொட்டல் நிருத்தா

# மட்டு மாநகர சபை

## மட்டு. மாநகர எல்லைக்குள் தனியார் வகுப்புக்களுக்கு 2 வாரங்கள் தடை



மாணவர்களின் சுவாத்தியமானதும், பாதுகாப்பானதுமான கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள் யாவற்றையும் இம்மாதம் 15ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி வரை இடை நிறுத்த மட்டக்களப்பு மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.



அத்துடன் சாதாரண தரப் பரீட்சை முடிந்தவுடன் ஆரம்பிக்கப்படும் புதிய உயர்தர வகுப்புக்கள் அனைத்தும் பரீட்சை முடிந்து ஒரு மாத காலத்திற்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட வேண்டும். என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 22.10.2018 அன்று தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில், தமது கல்வி நிலையங்களில் கல்வி பயில வரும் மாணவர்களின் அடிப்படை சுகாதார வசதிகள், இருக்கை வசதிகள், போதிய வெளிச்சத்துடன் காற்றோட்டம் நிலவக் கூடிய சூழல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யக் கூடிய வகையில் கல்வி நிலையங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் என உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் ஆரோக்கியமான சூழலில், ஈர்ப்புடனான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தனியார் கல்வி நிலையங்களுக்கு தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் நிம்மதியான மனோநிலையினை அடையும் வகையிலும் மாநகர சபையின் 06.12.2018 அன்று நடைபெற்ற 12 ஆவது சபை அமர்வில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானம் தொடர்பில் மாநகர ஆணையாளரால் உரிய கல்வி நிலையங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி தடையுத்தரவுக் காலத்திற்குள் குறித்த கல்வி நிலையங்களில் உட்கட்டுமான வசதிகளையும், மாணவர்களின் பாதுகாப்பினையும், சீரான கட்டண ஒழுங்குகளையும், உறுதிப்படுத்திய பின்னரே கல்வி நிறுவனங்களை மீழ ஆரம்பிக்க முடியும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

## இதுவும் ஒரு நல்ல ஐடியா



மட்டக்களப்பு மாநகரசபை சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு பலவகைத் திட்டங்களை அமுல்படுத்திவரும் வேளையில், மட்டக்களபிற்கு ஒரு அரும்காட்சியகத்தை ஏன் ஊருவாக்கக் கூடாது?



நம் மட்டக்களப்புக்கு பெருமையும் தருவதுடன் அடையாளமாகவும் விளங்குவது மட்டு நகரின் அமைந்துள்ள எமது டச்சுக் கோட்டை.

இதனை மையமாகக் கொண்டு ஒரு அருங்காட்சியகத்தை அமைத்தால் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதுடன் வருவாயையும் ஈட்டிக்கொள்ளலாமே.

-- லியோண் --

## திண்மக்கழிவகற்றலுக்கு உதவும் வாகனங்கள்




மட்டு மாநகரின் திண்மக்கழிவகற்றல் சேவையினை மேம்படுத்தும் நோக்கிலும், துரித கழிவகற்றல் செயற்பாடுகளின் ஊடாக சுத்தமான மாநகரை உருவாக்கும் நோக்கிலுமாக மட்டக்களப்பு மாநகர சபையால் புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கொம்பக்டர் வாகனங்களையும், இழுவைப் பெட்டியுடன் கூடிய நான்கு உழவு இயந்திரங்களையும் மக்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கும் நிகழ்வானது கௌரவ மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகரத்திற்குள் வதியும் மக்களின் வரிப்பணத்தின் ஊடாக, மாநகர சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற மக்களுக்கான சுகாதார சேவையை மேலும் வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் மேற்கொள்ள ஏதுவாக சுமார் 22 மில்லியன் ரூபாய்கள் செலவில் இவ்வாகனங்களை தாம் கொள்வனவு செய்துள்ளதாக கௌரவ முதல்வர் தெரிவித்தார்.

கொள்வனவு செய்யப்பட்ட குறித்த வாகனங்களை மாநகர சபையின் சுகாதார மற்றும் வேலைகள் குழு தலைவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் மாநகர கௌரவ பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல், மாநகர சபையின் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டு மாநகரசபையின் 12ஆவது பொது அமர்வு



மட்டு மாநகரசபையின் 12ஆவது பொது அமர்வு மாநகரசைபையின் கேட்போர் கூடத்தில் 06-12-2018 அன்று முதல்வர் தி.சரவணபவான் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் பிரதி முதல்வர் உள்ளிட்ட அனைத்து மாநகரசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதில் முதல்வர் மாநகரசபையின் ஆட்சியை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டதில் இருந்து, வருடத்தின் இறுதி மாதம்வரை மேற்கொண்ட பணிகள் தொடர்பிலும் அவற்றின் முன்னேற்றம் பற்றியும் குறிப்பிட்டார். அத்துடன் நிதி, சுகாதாரம், கொள்வனவு மற்றும் மாதாந்த வரவு செலவு அறிக்கை போன்ற பல்வேறு விடையங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

லியோண்

## குப்பைத் தெட்டிகளில் ஏன் இந்த ஓரவஞ்சனை?

மாநகரசபை எல்லைக்குற்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகளில் கழிவகற்றுவதற்காக கட்டணம் அறவிடப்பட்டு உரப்பைகள் வழங்கப்படுகின்றன. இந்த உரப்பைகளில் சேமிக்கப்படும் குப்பைகளை பாதுகாப்பாக வைப்பதில் பெரும் சிரமம் ஏற்படுகின்றது. நாய், காகம் போன்றவற்றினால் இப்பைகள் சிதைக்கப்பட்டு அசுத்தமாகின்றன.

ஆனால் நகர மையப்பகுதியில் சில இடங்களில் கழிவகற்றுவதற்காக குப்பைத் தொட்டிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான தெட்டிகளை மாநகரம் முழுவதற்கும் வழங்கி கழிவகற்றலை ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருமாறு மட்டு மாநகரசபை மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# மட் / மாநகரசபைக்குள் இல்லாதொழிக்கப்பட்ட பொதுமலசல கூடங்கள்

மனித மலத்தை மனிதனே எடுக்கும் கொடூரத்துக்கு முடிவெடுக்க வேண்டும் என்ற தோழர் கிருஸ்ணக்குட்டி அவர்களின் வேண்டுகோளின் நிமித்தமும் அவரது அயராத செயற்பாட்டுத் திறனாலும்; சகல வீடுகளுக்கும் அம்மலசல கூடத்துக்கருகில் பெருங்குழிகளை அமைத்து மலத்தினை இடும் திட்டம் உருவாகியது. இதனை 'குழிக்கக்கூஸ்' என்று மக்கள் அழைத்தனர். இதனால் சகல இடங்களிலுமிருந்த வாளி மலசலகூடங்களும் மலம் எடுக்கும் தோட்டித் தொழிலாளிகளும் இல்லா தொழிக்கப்பட்டனர். இவ்வாறு இல்லாதொழிக்கப்பட்ட பொது மலசலகூடங்களின் விபரங்கள் இதோ.

**01. பீக்குடா**

இப்போது மாநகரசபைக்குரிய வாகனங்களின் தரிப்பிட நிலையமாக முனைவீதியில் இருக்குமிடத்திலேதான் முன்பு இருபது அறைகளைக் கொண்ட பொதுவாளிமலசல கூடங்களிருந்தன. இதில் பத்து ஆண்களுக்கும் பத்து பெண்களுக்குமாக இருந்தன. இவ்விடத்தை ''பவராசடி'' என்றும் அழைத்தனர். இவ்விடத்துக்குத்தான் இதையண்டி இருந்த வீடுகளிலுள்ள வாளிமலசலகூடங்களின் மலங்கள் சேகரிக்கப்பட்டு பின் அவை கிறவல்குழிக்கு கொண்டு செல்லப்பட்டமையினால்தான் இவ்விடத்தை "பீக்குடா" என அழைத்தனர்.

**02.சுங்கவீதி**

தற்போது காந்திபூங்கா இருக்கும் சதுக்கத்தில் "ரேகடி" என அழைக்கப்பட்ட வெளியூர்களில் இருந்து படகுகளில் கொண்டு வரப்படும் பொதிகளை இறக்கும் இடத்துக்கு அருகாமையிலும்; அக்காலத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்த உப்பு, சீனி, மா,



வெங்காயம் ஆகியவை களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலைக்கு எதிராகவும் ஆற்றங்கரையோரமாக நான்கு அறைகளைக் கொண்ட கழிவறை அமைக்கப்பட்டிருந்தது.

**03.வாவிக்கரைவீதி**

முதலியார் வீதியும் வாவிக்கரை வீதியும் சந்திக்கும் பகுதியில் வேலாயுதசாமி கோவிலுக்கு சற்று தொலைவில் ஒருகழிவறை அமைக்கப்பட்டிருந்தது இக்கழிவறையை கன்னன்குடா, பெரியகளம் ஆகிய இடங்களுக்கு தோணியில் பிரயாணம் பண்ணும் பிரயாணிகள் அதிகமாக பாவித்தார்கள்.

**04.சல்லிப்பிட்டி**

மட்டக்களப்பு பொதுவைத்திய சாலைக்கு பின்புறம் சலவைத் தொழிலாளிகளின் குடியிருப்புக்கு அன்மையிலும் ஒரு பொது மலசலகூடம் அமைந்திருந்தது. இம்மலசலகூடம் பெரும்பாலும் அக் கிராமத்தவர்களின் பாவனையிலிருந்தது.

**05.உப்புக்கராச்சி**

தற்போது பூம்புகார் என அழைக்கப்படும் ''உப்புக்கராச்சி'' கண்ணகியம்மன் கோவில் பிரதான வீதியில் "கிருஸ்ணா கபே" இருக்கும் இடத்துக்கு முன்புறமாக சற்றுத் தொலைவில் எட்டு அறைகளைக் கொண்ட கழிவறை இருந்தது. இக்கழிவறையை மீனவர்கள் அதிகமாக பாவித்தார்கள். இக்கழிவறை இருந்த இடத்தில் இப்போது சோம்பேறிகள் மடம் இருக்கிறது.

**06.சந்தைவீதி**

மட்டக்களப்பில் இப்போது கட்டப்பட்டு திறப்புவிழா செய்யப்பட்ட பொதுச்சந்தைக் கட்டடம் இருக்கும் இடத்துக்கு முன்புறமாக நான்கு அறைகளைக் கொண்ட கழிவறை இருந்தது. இக்கழிவறையை சந்தை வியாபாரிகள் அதிகமாக பிரயோசனப் படுத்திக் கொண்டார்கள்.

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

**07.சோனகர்தெரு**

சோனகர் தெருவுக்கும் அரசடிப்பிள்ளையார் கோவில் வீதிக்கும் இடைப்பட்ட பெரிய இடப்பரப்பில் இருபது அறைகளைக் கொண்ட பொதுமலசலகூடம் இருந்தது. இதில் பத்து ஆண்களுக்கும் பத்து பெண்களுக்குமாக இருந்தன. இக்கழிவறைகளை அண்டிய பகுதியில் தோட்டித் தொழிலாளிகளின் குடியிருப்புகளும் இருந்தன. அக் குடியிருப்புகளில் வசித்த முனியாண்டி; இராமையர் ஈக்கிலி; அம்மாசி; ஐயப்பன்; சின்னவிசிக்கி; வேலாச்சி; வெள்ளையன் போன்ற தோட்டி தொழிலாளிகளும் அவர்களின் குடும்பங்களும் பின்பு நாவற்குடா குவாட்டசுக்கு குடியமர்தப்பட்டனர். இவ்விடம் அக்கிராம மக்களால்; "கக்குசடி" என அழைக்கப்பட்டது. இப்போது அவ்விடத்தில் ஆறாம் வட்டார கனிஸ்ட வித்தியாலயம் அமைந்திருக்கின்றது. இருந்தும் அந்த கல்விகற்கும் கல்விக் கூடத்தை பலர் கக்குசடிப் பள்ளிக்கூடம் என்றே அழைக்கின்றனர்.

**08.தெய்வநெறிக்கழகஒழுங்கை**

பொற்கொல்லர் வீதியில் அமைந்திருக்கும் மாரியம்மன் கோவிலுக்கு முன்பாக இருக்கும் தெய்வநெறிக் கழக ஒழுங்கையில் ஆறு அறைகளையுடைய கழிவறைகள் அமைக்கப் பட்டிருந்தன. பின்பு இது பாவனையிழந்து பாழடைந்து கிடந்தபோது. என்பத்திமூன்றுகளில் அரசினர்க்கல்லூரி ஆய்வுகூடம் உடைக்கப்பட்டு இராசயனத் திரவங்கள் இங்கு வைக்கப் பட்டிருந்ததாகவும் இவ்விடத்தில் பரமதேவா என்கின்ற போராளி கைக்குண்டுகளை தயார் செய்ததாகவும் மக்கள் பேசிக் கொண்டனர்.

**09.பார்வீதி**

பார்வீதியும் திருத்தொண்டர் வீதியும் சந்திக்கும் இடத்திலும் ஒரு கழிவறை இருந்தது. இப்போது அவ்விடத்தில் தையல் நிலையமொன்றும் மட்/ மாநகரசபையின் பாவனையிலிருக்கும் சிறிய கட்டடம் ஒன்றும் இயங்கி வருகின்றன.

மேலதிக தகவல்: கேரளத்தைச் சேர்ந்த கிருஸ்ணக் குட்டி அவர்கள் ஒரு கம்யூனிஸ செயற்பாட்டாளர். மட்டக்களப்பின் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

**'அம்பாறையில் 5ஆவது குழந்தை பெறும் தமிழ்க்குடும்பத்திற்கு 25ஆயிரம் ரூபாய் சன்மானம்!'**

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

'தமிழ்மக்களின் இனப்பெருக்கவீதம் வலுவாகக்குறைந்துவிட்டது. குறிப்பாக நகர்ப்புறங்களில் வெகுவாகக்குறைந்துவிட்டது. ஆனால் ஒரு நாட்டில் அனைத்திற்கும் அடிப்படை அளவுகோலாக இருப்பது சனத்தொகையே. எனவே தமிழர்களின் சனத்தொகைச் செறிவை அதிகரிக்கவேண்டும். இதற்காக வசீகரன் அறக்கட்டளை நிதிய முகாமைத்துவ நிறைவேற்றுப்பணிப்பாளர் லண்டனில் வாழும் மகான் கோடீஸ்வரன் இந்தத்திட்டத்தை முன்வைத்துள்ளார்.

எம்கண்முன்னே மீனோடைக்கட்டு போன்ற தமிழ்மக்கள் வாழந்த பல பிரதேசங்கள் பறிபோயின. திராய்க்கேணியின் நிலை கவலைக்கிடம். அங்கு மகான் கோடீஸ்வரன் முதலில் 35வீடுகளைக்கட்டிக்கொடுத்தார். இன்று தமிழ்மக்களின் சனத்தொகையைக்கூட்டவேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை முன்வைத்துள்ளார்' என்றார்.

தொடர்ச்சி...

**கிழக்கில் 760ஆசிரியர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்!**

இந்த 760 ஆசிரியர்களுள் 313 பேர் தாமாக விரும்பி விண்ணபித்ததன் அடிப்படையில் இடமாற்றசபையினூடக பரிசீலனைக்குட்படுத்தி விடுவிக்கப்பட்டவர்களாவர்.

மீதி 447 பேர் கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளில் குறித்த காலப்பகுதியை பூர்த்திசெய்யாத அல்லது அறவே அப்படிப்பட்ட பாடசாலைகளில் பணிபுரியாத ஆசிரியர்களாவர்.

இப்படிப்பட்ட 447 ஆசிரியர்களின் பெயர்விபரங்கள் அந்தந்த வலயக்கல்விப்பணிப்பாளர்களால் தரப்பட்டவையாகும்.

ஏழு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மாகாண இடமாற்றசபை மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் ஏ.விஜயானந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்று இவ்விடமாற்றப்பட்டியலை தயாரித்து அங்கீகரித்துள்ளது.

விளம்பரம்

**PILLAIYAR METAL WORKS**



திருவாசி, கலசம், கொடிஸ்தம்பம், வெண்கல, கருங்கல் சிலைகள், சுவாமி சிலைகள் இன்னும் கோவிலுக்கு தேவையான உபகரணங்கள் பாரம்பரிய தொழில் நிபுணர்களால் செய்து தரப்படும். கோயிலிலுள்ள பழைய பித்தளை செம்பாலான பொருட்கள் நல்ல விலைக்கு பெற்றுக் கொள்ளப்படும். சுத்தமான வெண்கல மணி 10 கிலோவில் இருந்து 1000 கிலோ வரை நல்ல ஓசை ஏற்படக்கூடிய விதமாக கோவிலுக்குள்ளேயே வைத்து செய்து தரப்படும். இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் வேலை செய்து கொடுத்துள்ளோம். கலசம். கொடிஸ்தம்பம் பொலிஷ் செய்து தரப்படும். இந்தியாவிலிருந்து கும்பகோணம் மகாவலிபுரத்திலிருந்து கருங்கல்லினாலும் பஞ்சலோகத்தினாலும் ஆக்கப்பட்ட முருகன.லக்ஷ்மி. சரஸ்வதி. பிள்ளையார. சிவன் போன்ற சிலைகள் குறைந்த விலையில் தரப்படும். செம்பு. கொடிக்கம்பம் 23 அடி நல்ல கனமான உலோகத்திலானவை 125kg யை விட அதிக நிறை கொண்டவை. மிக அழகான முறையில் அலங்காரம் செய்யப்பட்டவை விற்பனைக்கு உண்டு. நாட்டில் உள்ள எந்தவொரு பிரதேசத்திற்கும் எடுத்துவந்து (free transport) பொருத்தித் தரப்படும்.

தொடர்புகளுக்கு
C.S.பத்மலால்இ முகவரி : **No 04, Bar Road, Batticaloa.**
கொமர்ஷல் Bank இற்கு அருகாமையில். **T.P :** 0776765504

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 15

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### மரபுப்பெயர்கள்

01. கீரியின் இளையது குட்டி என்பது போல அணிலின் இளையது
(1) பிள்ளை (2) பறள் (3) குஞ்சு (4) பேத்தை

02. நெல்லின் இளையது நாற்று என்பது போல பனையின் இளையது
(1) வடலி (2) கன்று (3) குட்டி (4) நாற்று

03. கன்று என்னும் இளமைப் பெயர் பொருந்தக்கூடியவை
(1) பலா, எலுமிச்சை (3) நெல், பலா
(2) நெல், புகையிலை (4) மா, புகையிலை

04. அறிஞர் கூட்டத்தைக் குறிக்கப் பயன்படும் பொருத்தமான சொல்
(1) அணி (2) கூட்டம் (3) அவை (4) திரள்

05. ஆந்தை அலறும் என்பதைப் போல புலி
(1) அகவும் (2) கர்ச்சிக்கும் (3) கத்தும் (4) உறுமும்

06. மாவிற்கு இலை போல தென்னைக்கு
(1) இலை (2) ஓலை (3) மட்டை (4) தோப்பு

07. கற்றாளையின் உள்ளீடு சோறு என்பது போல மாவின் உள்ளீடு
(1) அரிசி (2) சதை (3) தசை (4) வடு

08. வாழைக்கு குலை போல சோளத்திற்கு
(1) குலை (2) கதிர் (3) கொத்து (4) சுண்டு

09. ஆட்டு மலம் பிழுக்கை என்பது போல கழுதை மலம்
(1) எச்சம் (2) இலத்தி (3) விட்டை (4) சாணம்

10. ஆட்டுக்குக் கடா போல குரங்குக்கு
(1) மறி (2) குண்டு (3) கடுவன் (4) மந்தி

11. வைக்கோல் அடுக்கப்பட்டிக்கும் நிலை
(1) வரம்பு (2) சிப்பம் (3) பாடம் (4) போர்

12. கப்பல் செலுத்துவோன்
(1) மீகாமன் (2) சாரதி (3) வலவன் (4) சாரதி

13. நாய்க்குக் கடுவன் போல பூனைக்கு
(1) குட்டி (2) எலி (3) பெட்டை (4) கடுவன்

14. மாட்டுக்குப் பசு போல புலிக்கு
(1) ஆண் (2) போத்து (3) கடுவன் (4) பிணா

15. கருவாடு அடுக்கப்பட்டிருக்கும் நிலை
(1) பாடம் (2) சிப்பம் (3) கட்டு (4) முழுமை

16. யானையின் மலம் இலத்தி போல ஒட்டகத்தின் மலம்
(1) பாலைவன எச்சம் (2) இலத்தி (3) விட்டை (4) எச்சம்

17. நெல்லின் உள்ளீடு அரிசி போல கோதுமையின் உள்ளீடு
(1) பருப்பு (2) மணி (3) மா (4) அரிசி

18. கிளி பேசும் என்பது போல பசு
(1) கத்தும் (2) முக்காரமிடும் (3) பிளிறும் (4) கதறும்

19. உயிரின் கூட்டம் தொகுதி போல பல்லின் கூட்டம்
(1) முரசு (2) கோரப்பல் (3) வரிசை (4) ஒழுங்கு

20. பூவின் கூட்டம் கொத்து என்பது போலப் புல்லின் கூட்டம்
(1) கட்டு (2) கற்றை (3) அடுக்கு (4) குவியல்

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும்.
முடிவுத் திகதி : 20.12.2018.

அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## கலைச் சொற்கள் -விடை

**கலைச் சொற்கள்** என்ற தலைப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடை

| | | |
|---|---|---|
| 1. (1) | 6. (2) | 11. (4) |
| 2. (4) | 7. (3) | 12. (3) |
| 3. (2) | 8. (2) | 13. (3) |
| 4. (2) | 9. (3) | 14. (1) |
| 5. (3) | 10. (2) | 15. (1) |

# விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் – இரசாயனவியல்

## க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கானது

## இரசாயனத் தாக்கங்கள்

- R.N.Rஅரவிந்த் -

<u>இரசாயனத் தாக்கங்கள்</u>

பௌதிக ரீதியாக மீள முடியாத செயற்பாடுகள் இரசாயன மாற்றங்கள் எனப்படும். இம்மாற்றங்கள் இரசாயனத் தாக்கங்களால் நிகழ்கின்றன. ஆகவே இரசாயன மூலகங்கள் அல்லது மூலக்கூறுகள் பௌதிக ரீதியாக ஒன்றோடொன்று தாக்கமடைந்து புதிய பதார்த்தங்களை உருவாக்குகின்ற செயற்பாடு இரசாயன தாக்கம் எனப்படும்.

இத்தாக்கம் 4 வகைப்படும்.

1. இரசாயன சேர்க்கைத் தாக்கம்
2. இரசாயன பிரிகைத்கைத் தாக்கம்
3. இரசாயன ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கம்
4. இரசாயன இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம்

<u>இரசாயனச் சேர்க்கைத் தாக்கம்</u>

இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான மூலகங்கள் அல்லது சேர்வைகள் இரசாயன ரீதியில் தாக்கத்திலீடுபட்டு தனியொரு சேர்வையை உருவாக்குமாயின் அவ்வாறான இரசாயனத் தாக்கங்கள் இரசாயன சேர்க்கைத் தாக்கம் எனப்படும்.

| | |
|---|---|
| Eg: $4Na+O_2+2Na2O$ | $A + B = AB$ |

<u>இரசாயனப் பிரிகைத்கைத் தாக்கம்</u>

ஒரு சேர்வையை இரண்டு அல்லது அதிக எண்ணிக்கையான எளிய பதார்த்தங்களாகப் பிரிகையடையச் செய்யும் தாக்கம் பிரிகைத் தாக்கம் எனப்படும

| | |
|---|---|
| $2KMnO_4 = K_2MnO_4+MnO_2+O_2$ | $AB = A + B$ |

<u>இரசாயன ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கம்</u>

ஒரு மூலகம் யாதாயினும் சேர்வையிலுள்ள வேறொரு மூலகமொன்றை இடம்பெயர்க்கும் தாக்கம்இ ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கம் எனப்படும்.

| | |
|---|---|
| $Zn + CuSO_4 = ZnSO_4 + Cu$ | $A + BC = AC + B$ |

<u>இரசாயன இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம்</u>

ஒரு சேர்வையில் அடங்கும் மூலகம் அல்லது மூலக அயன் மற்றுமொரு சேர்வையிலுள்ள மூலகம் அல்லது மூலக அயன்களால் பரிமாற்றப்படும் தாக்கம் இரட்டை இடப்பெயர்ச்சித் தாக்கம் எனப்படும்.

| | |
|---|---|
| $AgNO_3 + HCL = AgCl + HNO_3$ | $AB + CD = AD + CB$ |

பின்வரும் தாக்கங்கள் எத்தகைய தாக்ககங்கள் என இனங்காண்க.

1. $2Mg + O_2 = 2MgO$ (.......................... )
2. $CaO + CO_2 = CaCO_3$ (.......................... )
3. $CaCO_3 = CaO + CO_2$ (.......................... )
4. $Zn + CuSO_4 = ZnSO_4 + Cu$ (..........................)
5. $Bacl + Na_2SO_4 = BaSO_4 + NaCl$ (..........................)

பக்க அனுசரணை

NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## "கெனடி" என்னும் முன்கள வீரர்

1980 களில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டத் தெரிவு அணி தேசிய மட்டத்தில் அறியப்பட்ட பலமான அணியாகத் திகழ்ந்துள்ளது. இந்த அணியில் ஆடிய அனைத்து வீரர்களும் திறமையானவர்களாக இருந்ததே இதற்கான அடிப்படையாக இருந்துள்ளது. இந்தத் திறமையான வீரர்களுள் அதி திறமையான முன்கள வீரராக ஆடியவரே கெனா எனச் சக வீரர்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட கெனடி.

மட்டக்களப்பின் கால்பந்தாட்ட வரலாற்றில் 1980 களிலிருந்து போட்டிகளை இரசித்து வரும் கால்பந்துப் பிரியர்கள் அனைவரையும் கவர்ந்த ஒரு நிகரில்லா வீரனாக கெனடி திகழ்ந்துள்ளார்.

மட்டக்களப்பு பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் அங்கத்தவராக இருந்து கால்பந்தாட்டத்தில் ஈடுபட்ட கெனடி அவர்கள் 1980 களில் தேசிய அணியில் விளையாடும் வீரருக்கான தகுதியையும் திறனையும் கொண்டவராக விளங்கியுள்ளார். எனினும் இவருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காது போனமை துரதிஸ்டமானதே.

தனது கால்பந்தாட்டத் திறமையினால் மட்டக்களப்பு மாநகர சபையில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொண்ட கெனடி, தான் விளையாடிய காலத்தில் காலையிலும் மாலையிலும் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடும் ஒரு தலை சிறந்த வீரராக விளங்கியுள்ளார்.

விளையாடும் போது பந்தினைக் கட்டுப்படுத்தும் அபரிமிதமான ஆற்றல் பெற்ற வீரராக கெனடி வெளிப்பட்டுள்ளார்.

தேசிய மட்டத்தில் பிரபல்யமான வீரர்கள் பங்குபற்றும் போட்டிகளில் மட்டக்களப்புத் தெரிவு அணி பங்குபற்றும் போது அங்கு வரும் வீரர்களும் பயிற்சியாளர்களும் கெனடி விளையாடுகின்றாரா? என கெனடியை விசாரிப்பது வழமையாக இருந்துள்ளது. இந்தளவிற்கு கெனடி நாடறிந்த மட்டு நகரின் கால்பந்தாட்ட வீரனாகத் திகழ்ந்துள்ளார்.

1990 களில் திருகோணமலையில் நடைபெற்ற தேசிய ரீதியில் முன்னிலை பெற்ற பிரபல கழகங்கள் பங்குபற்றிய கால்பந்தாட்டத் தொடர் ஒன்றில் மட்டக்களப்பு பாடுமீன் பொழுதுபோக்குக் கழகம் பங்குபற்றி இறுதிப் போட்டி வரை முன்னேறி இலங்கை கடற்படை அணியுடன் இறுதிப் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தது.

**து.கௌரீஸ்வரன்**

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய பாடுமீன் அணியுடன் போட்டியிட வந்த இலங்கையின் முன்னணிக் கால்பந்தாட்டக் கழகங்களின் முன்னாள் வீரர்களாகத் திகழ்ந்த பயிற்சியாளர்கள் பலரும் மட்டக்களப்பு பாடுமீன் அணி வீரர்களுடன் அறிமுகமாகி உரையாடிய போது திரு ஜெயசூரியம் அவர்களையும், திரு கெனடி அவர்களையும் கேட்டு விசாரித்ததாக அந்நாட்களில் திருகோணமலை சென்று போட்டியில் பங்குபற்றிய வீரர்களும், இரசிகர்களும் சொன்னார்கள்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## கோட்டைமுனை விளையாட்டுக்கழக புதிய நிர்வாகம் தெரிவு



மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் 2019ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகம் கழகத்தின் நம்பிக்கையாளர் சபை முன் தெரிவு செய்யப்பட்டது. இவ் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் V.ஈஸ்வரன் அவர்களும் மண்முனை வடக்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் P.பிரசாத் அவர்களும் கிராம உத்தியோகத்தரும் கலந்து கொண்டது விசேட அம்சமாகும்.

கழகத்தின் புதிய தலைவராக மீண்டும் P.சடாற்சரராஜாவை சகலரும் ஏகமனதாக தெரிவு செய்ய, செயலாளராக B.ஜெயதாசன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். பொருளாளராக மீண்டும் K.தயாசிங்கம் தெரிவு செய்யப்பட, உப தலைவராக S.தங்கராஜாவும் உப செயலாளராக G.முகுந்தன் அவர்களும் உப பொருளாளராக T.சஜிதராஜ் அவர்களும் உதைபந்தாட்ட முகாமையாளராக S.தேவராஜன் அவர்களும் கிரிக்கெட் முகாமையாளராக P.பகீரதன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகக் குழு உத்தியோகத்தர்களாக K.ராஜேந்திரா, G.இராஜாஜி, V.வசந்தமோகன், S.அருள்மொமி, R.உமாபதி, நிமால் மோஸஸ், C.யசோகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் போசகர்களாகவும் ஆலோசகர்களாகவும் M.உதயகுமார் அவர்களும் V.வினோபா இந்திரன் அவர்களும் தொடர்ச்சியாக செயற்படுவார்கள் என ஏக மனதாக தெரிவிக்கப்பட்டதுடன் இக்கழகத்தை தொடர்ந்தும் நம்பிக்கையாளர் சபையே தம் முழுக்கட்டுப்பாட்டில் வைத்து செயற்படும் என ஏகமனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஹொக்கிலயன்ஸ் கழகத்தலைவராக லவன் மீண்டும் தெரிவு!

காரைதீவு ஹொக்கிலயன்ஸ் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தொடர்ந்து 5வது தடவையாகவும் த.லவன் மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இக்கூட்டம் மாவடிகந்தசுவாமி ஆலயமுன்பாகவுள்ள நூலகத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

கழகப்போசகர்களான உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கமநலஅபிவிருத்தி உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

புதிய ஆண்டுக்கான புதிய நிருவாகிகள்தெரிவும் இடம்பெற்றது.

அதன்போது த.லவன் மீண்டும் தெரிவானார்.

கண்டி திருத்துவக்கல்லூரியில் பயின்ற த.லவன் ஒரு பொலிஸ் அதிகாரியாவார். அவர் ஹொக்கி விளையாட்டை இப்பிராந்தியத்தில் அறிமுகப்படுத்தியதோடு இக்கழகத்தையும் ஸ்தாபித்து இம்முறை மாவட்ட மாகாணப் போட்டிகளை வென்று தேசியப்போட்டியில் வெற்றிபெறவும் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**காரைதீவு சகா**

## மட்டு. மாவட்ட வலைப்பந்தாட்ட வீரர்களுக்கான ஒருநாள் பயிற்சி முகாம்



இலங்கை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டு பிரிவும் இணைந்து நடாத்தும் மாவட்ட வலைப்பந்தாட்ட வீரர்களுக்கான ஒருநாள் பயிற்சி முகாம் மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

இலங்கை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள வலைப்பந்தாட்ட திட்ட உத்தியோகத்தர் திருமதி டி .எம் .பி . குமாரி ஹாமி தலைமையில் நடைபெற்ற இவ் ஒருநாள் பயிற்சி முகாமில் மட்டக்களப்பு மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள், மாவட்ட திணைக்கள வலைப்பந்தாட்ட வீரர்கள், பாடசாலை மற்றும் கழக வலைப்பந்தாட்ட வீர, வீரங்கனைகள் கலந்துகொண்டனர்.

பயிற்சி முகாமின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய இலங்கை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள வலைப்பந்தாட்ட திட்ட உத்தியோகத்தர் திருமதி டி .எம் .பி . குமாரி ஹாமி, மட்டக்களப்பு மாவட்டத்தில் வலைப்பந்தாட்ட வீரர்களை புதிய தொழில்நுட்ப ரீதியில் பயிற்றுவிக்கப்பட்டு வீரர்களை தேசிய ரீதியில் கொண்டு செல்ல இந்தவலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் நடாத்தப்படுவதாக தெரிவித்தார் .

இதன் ஆரம்ப நிகழ்வில் அதிதிகளாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி சிறிகாந்த், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே .டி சந்திரபால, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி. ஈஸ்வரன் மற்றும் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## சமயச் சடங்குகளின் வகைகள்

இவ் வகையில் சமயச் சடங்குகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. மதநம்பிக்கையுடன் ஒரு சமூகத்தினர் அனைவரும் பங்கு கொள்ளும் சடங்குகள்.

2. பொருளாதார அகச் சிதைவு காரணமாக சடங்குகளின் பாலிருந்த நம்பிக்கை நெகிழ்வடையினும் அதை நிகழ்த்துவதால் தமக்கு நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் நிகழ்த்தப்படும் சடங்குகள்.



3. நம்பிக்கை நெகிழ்வடையினும் தம்முடைய பாரம்பரியம் இது. எனவே இதனை நிகழத்த வேண்டும் என நிகழ்த்தப்படும் சடங்குகள்.

இச்சடங்குகள் அனைத்திற்கும் உதாரணங்களக மட்டக்களப்புச் சடங்குகள் காணப்படுகின்றன.

முதலாவது சடங்குகட்கு உதாரணமாக மடடக்களப்புப் /பிரதேசத்தில் நடைபெறும் கோயிற் சடங்குகளைக் கூறலாம்.

இரண்டாவதற்கு உதாரணமாக வயலிலே விளைவு வேண்டி நடத்தப்படும் சடங்குகளைக் குறிப்பிடலாம்

. மூன்றாவதற்கு உதாரணமாக கொம்பு முறித்தலைக் கூறலாம்.

“நாடகம் சமயச் சடங்கினடியாகத் தோன்றி அச்சமயச் சடங்கு அதன் மத நம்பிக்கை அடிப்படையாக இழுத்துச் செல்ல நாடகமும் படிப்படியாக மதச் சார்பற்ற உலக விடயங்கள் பற்றிய கலை வடிவமாக மாறுகிறது என்பது வரலாற்றின் முடிந்த முடிபாகும்.”

எனவே நாடகத்தின் மூலக்கூறுகளை நாம் சடங்குகளிலேதான் காண முடியும்.

### சடங்கும் நாடகமும்

---

ட்ராமா (Drama) எனும் ஆங்கிலச் சொல்லின் மூலமொழி கிரேக்கமாகும். கிரேக்கத்தில் Drama என்ற சொல் கரணபூர்வமான செயலைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டது என்பதோடு அங்கே அது செய்யப்பட்ட எதனையாவது கருதும் Dramenon என்ற சொல்லாக இருந்தது.

அடுத்த கட்டத்திலே இது Drama என்ற சொல்லாகியது. சமயச் சடங்காக இருந்த கட்டத்திலே Dramenon என்றும், லௌகிக நிலைப்பட்ட கட்டத்தில் drama என்றும் இச்சொல் வழங்கிற்று. அதாவது சமயச் சடங்கு உலகியல் நிலைப்பட்ட காலத்தே நாடகம் தோன்றியது."

Drama என்பது தமிழில் நாடகம் என அழைக்கப்படுகிறது. நாடகம் என்ற சொல் சங்க காலம் தொடக்கம் தமிழரால் கையாளப்பட்டிருப்பினும் அது தமிழ்ச் சொல்லன்று. தமிழ் மயப்படுத்தப்பட்ட சமஸ்கிருதச் சொல்லாகும். நடனத்தையும் நாடகத்தையும், குறிக்கும் தமிழ்ச் சொல் 'கூத்து' என்பதாகும். குதி என்ற சொல்லனடியாகக் கூத்துப் பிறந்தது என்று சொல்வது தவறு என்றும், ஆடு என்ற வினையுடன் இச் சொல் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், ஆடு என்ற இவ்வினைச் சொல் சமயச் சடங்குகளைத் திருப்பிச் செய்தலைக் குறித்தது எனவும் கா. சிவத்தம்பி கூறுவார்.

மட்டக்களப்பில் மரபு வழி நாடகங்களைப் பாடியோர், ஏடுகளில் காப்பு வணக்கத்தின் போது நாடகம் என்று அவற்றைக் குறிப்பிட்ட போதும் பொதுமக்கள் அதனை இன்றும் கூத்து என்றே அழைக்கின்றனர். கூத்தாடுதல், கூத்தாட்டம், வீட்டுக்கு வீடு ஆடுதல், இராமருக்கு ஆடுகிறான், தருமருக்கு ஆடுகிறான் என்று கூத்தோடு ஒட்டி மட்டக்களப்பில் வழங்கும் சொற்கள் கூத்துக்கும் ஆட்டத்திற்கு மிடையேயுள்ள இணைப்பினைக் காட்டுகின்றன.

### ஆட்டமும் கூத்தும் நாடகமும்

---

மட்டக்களப்புச் சிறு தெய்வ வணக்கத்தின்போது ஒருவர் மீது தெய்வம் முற்பட்டு அவர் சடங்குகளில் ஈடுபடும்போது அதனைப் பேயாட்டம், தெய்வம் ஆடுகிறது, காத்தான் முற்பட்டு ஆடுகிறது, நரசிங்கம் ஆடுகிறது, மாரி ஆடுகிறது என்றே கூறுகின்றனர். எனவே இந்த ஆட்டங்களையும் கூத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். ஆட்டம் என்ற சொல் சடங்கு நிலையினின்றும் கலை தோன்றிய நிலையையும் உணர்த்துவதாகலாம். எனவே மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் மூலக் கூறுகளை மட்டக்களப்புச் சமயச் சடங்குகளில் தேடலாம்

இந்தியாவில் ராமலீலா நாடகம், தமிழ்நாட்டில் பாண்டவர்கதை, மலேசியாவில் Mayang நாடகம் என்பன நாடகங்களாயினும் சமயச் சடங்குகளாவே நடத்தப்படுகின்றன. மட்டக்களப்பிலும் இந்நிலையினைக் காணுகிறோம். எமது சமுதாயத்தில் நாடகம் ஒரே சமயத்தில் சமயக் கலையாகவும் சமயச் சார்பற்ற கலையாகவும் மிளிர்கின்றது. சடங்குகள் சமயச் சார்பினின்றும் விடுபடும் பொழுதே அவை கலைகளாகின்றன. நாடகமும் இவ்வாறே. ஆனால் எல்லாச் சடங்குகளும் நாடகமாகிவிடுவதில்லை. அதற்கான சமூகத் தேவைகளும் உருவாக வேண்டும். நாடகம் ஆகாத அதிகமான சடங்குகள் தமிழரிடையே இன்றும் நின்று நிலவுகின்றன. இச்சடங்குகளிலே நிறைய நாடக அமிசங்கள் காணப்படுகின்றன.

சிங்கள மக்களிடம் காணப்படும் நாடகத் தன்மையுடைய பல சமயச் சடங்குகளையும் அவற்றிற் காணப்படும் நாடக அமிசங்களை பேராசிரியர் சரத் சந்திரா தனது Folk Drama in Ceylon எனும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார்




ஈழத்துத் தமிழரிடையேயும் நாடகத் தன்மையுடைய சமயச் சடங்குகளைக் காண முடியும். யாழ்ப்பாணத்தில் பெரும் தெய்வ வழிபாடு முக்கியம் பெற்றமையினாலும், மன்னாரில் கிறித்தவ மதம் வேரூன்றியமையாலும் இச்சடங்குகள் பல இன்று வழக்கிழந்தன.

ஆனால் வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இன்றும் இவை நின்று நிலவுகின்றன. பெரும் தெய்வ வழிபாடுகளும், ஆகம விதிமுறைகளும் வழிபாட்டின் இன்னும் செல்வாக்கு வகிக்காமையாலும், சிறு தெய்வ வழிபாடும், வழிபாட்டு முறைகளுமே இன்று கிராம மக்களின் அன்றாட வழிபாடுகளாக இருப்பதனாலும், பொருளாதார நிலைமைகளில் அதிகளவு மாற்றம் ஏற்படாமையினாலும், நவீன வாழ்க்கை நெறிகள் முற்றாகப் புகாமையாலும் மட்டக்களப்புப் பகுதியிலே இச்சடங்குகள் இன்றும் உயிர்த் துடிப்போடு நிலவுகின்றன. அச்சமயச் சடங்குகளிலேதான் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்களின் மூல வித்துக்களைக் காண முடியும்

அடுத்து வரும் தொடர்களில் மட்டக்களப்பின் ஆகமம் சாராத வழிபாடுகளின் வியக்கத்தக்க முறைகளைக் காணலாம். இவ்வழிபாட்டு முறைகள் சிறு தெய்வ வழிபாட்டு முறைகளோடு சிலவேளைகளில் ஒத்திருந்தாலும் அவற்றில் சில வழிபட்டுமுறைகள் மட்டக்களப்பிற்கேயுரிய பிரத்தியேக வழிபாட்டு முறைகள் என்பதில் ஐயமில்லை. அவற்றின் சில வழிபாட்டுமுறைகளை அடுத்துக் காண்போம்.

(தொடரும்)

---

# எமக்கும் ஓட்டியாய், தோழனாய் வாய்த்த ஒரு கண்ணன் – ‘வர்ணகுலசிங்கம்‘



வர்ணகுல சிங்கம்

1990 களின் நடுப்பகுதியிலும் பிற்பகுதியிலும் கிழக்குப்பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியாக நான் பணி புரிந்தபோதும் விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் தலைவராகப் பணி புரிந்தபோதும் வாகனச் சாரதி வர்ணகுல சிங்கத்தை அறியும் வாய்ப்புக்கிட்டியது.

அவர் எனக்கும் வாகனச் சாரதியாக இருந்தார்

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுக் கூட்டங்களுக்கும் ஏனைய முக்கிய கூட்டங்களுக்கும் கொழும்புக்கும் ஏனைய வெளி மாகாணக் கூட்டங்களுக்கும் பீடாதிபதி என்ற வகையில் நான் செல்லுகையில் அவருடன் நீண்ட பயணம் செய்யும் வாய்ப்புகள் கிடைத்துள்ளன

அக்கால கட்டங்கள் கெடுபிடிகள் நிறைந்த காலம் இராணுவ அரண்கள் இராணுவக் கெடுபிடிகள் பலவற்றைத் தாண்டித் தாண்டிப் பயணிக்க வேண்டி வரும் குண்டு வெடிப்புகள் பயம், இன்னொரு புறம் எதுவும் நடந்து விடும் என்ற பீதி மறு புறம் இப்போது பீடாதிபதிகளுக்கும் தலைவர்களுக்கும்



*(படத்தில் காணப்படுபவர்கள் அனைவரும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிறந்த வாகனச் சாரதிகள்)*

பேராசிரியர் சி. மௌனகுரு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனை ஏற்படுத்தும் உடல் சார்ந்த பிரச்சினைகள் -6

கடந்த வாரம் மதுபாவனை சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை அறிந்தீர்கள். இதேபோல், மனித உடலின் எல்லா தொகுதிகளிலும் அதன் உறுப்புகளிலும் இவை பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உள்ளெடுக்கப்பட்ட மதுவில் உள்ள 'எதனோல்' அனுசேப செயற்பாடுகளிற்கு பின் 'காபனீர்ரொட்சைடாகவும்' நீராகவும் மாற்றப்படும். ஒரு சிறிய பகுதி 'எதனோல்' எவ்வித மாற்றமும் இன்றி வெளிச்சுவாச செயற்பாட்டின் மூலம் வெளியேற்றப்படும் வாகனச்சாரதி குடித்துவிட்டு ஓட்டினாரா? என்பதைக் கண்டறிவதற்கு 'காவல்துறை பாவிக்கும் மானியும் அதன் தொழிற்பாடும் வாகனசாரதியின் இரத்தத்தில் உள்ள எதனோலின் செறிவை கண்டறிந்து அதன் மூலமாக குறித்த நபரை சட்டத்திற்கு முன் நிறுத்தி தண்டனையை பெற்றுக்கொடுக்க உதவுகின்றது.



வெளிச்சுவாச வளியுடன் எதனோல் வெளியேவறுது போன்று, வியர்வை, சிறுநீர், தாய்ப்பால் என்பவற்றின் ஊடாகவும் 'எதனோல்' வெளியேற்றப்படலாம்.

### குருதிச்சுற்றோட்டத் தொகுதியில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

இதயம், அதனுடன் இணைந்த நாடி, நாளம், மயிர்த்துளைக் குழாய்கள் யாவும் ஒரு வலைப் பின்னல் போன்று உடல் முழுவதும் வியாபித்துள்ளன. குருதியினூடே மனித அனுசேப செயற்பாடுகளிற்கு தேவையான சத்துணவுகள், ஒட்சிசன், மருந்துகள், ஓமோன், ஏனைய பொருட்கள் கடத்தப்படுகின்றன. அத்துடன் அனுசேப தொழிற்பாடுகளின் கழிவுகளும் நுரையீரல், சிறுநீரகம் போன்றவற்றிற்கு எடுத்துச்செல்லப்படுகின்றன.


குருதி ஒரு பாயமாக இருப்பதால் இது சாத்தியப்படுகிறது. அத்துடன் இயத்திலும், குருதிக் குழாய்களிலும் உள்ள அமுக்க மாற்றத்தின் மூலம் புவியீர்ப்பிற்கு எதிராகவும், சார்பாகவும் இவை செலுத்தப்படுகின்றன. மதுபாவிக்கும் ஒருவரில் 'எதனோல்' உயர்குருதி அமுக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் ஒருவரில் ஏற்படலாம்.

படிப்படியாக, குடிக்கு அடிமைப்பட்டவரில் உயர்குருதி அமுக்கம் ஏற்படுத்தும் பாதிப்புகளும் இதய துடிப்பு ஒழுங்கீனங்கள் என்பன மூளையறைக் கோணங்களில், குருதிச் சிறுதட்டுகளில் பாதிப்பை ஏற்படுத்த, அங்கு குருதியுறைதல் ஏற்படுத்துகிறது. இது பாரிசவாதம் / பக்கவாதம் (Stroke) ஆகின்றது.

அதேபோல், இதயத்திற்கு குருதி விநியோகம் செய்யும் முடியுறு நாடிகளில் (Coronary artery) ஏற்படும் அடைப்புகள் இதய தாக்குதலாக (Ischemic Heart Disease) வெளிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் இதய தசைகளை பலவீனப்படுத்தி (Alcohol Myopathy), தசைகள் செயழிழக்கும் நிலையில் இதய துடிப்பு ஒழுங்கீனம் (Cardiac Arrhythmias) சில வேளைகளில் உரிய நேரத்தில் கவனிக்கப்படாத போது மரணத்தில் முடிவடையும்.

அதிக மதுபாவனையால் அதிக சிறுநீர் கழிக்கப்படுவதுடன் மது பாவிக்கும் ஒருவர் பாவிக்கும் வேளையிலும்,




ஏனைய நேரங்களிலும் உட்கொள்ளும் நீரின் அளவு மிகக் குறைவாக காணப்படும். இதுவும் உயர் குருதி அமுக்கத்திற்குரிய காரணமாகும். சிறுநீரகங்களில் ஏற்படுகின்ற உயர்குருதி அமுக்கம் அத்துடன் நீரிழப்பால் சிறுநீரக செயழிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. (Reral failure) அத்துடன் சலரோகம் (Diabetes) ஏற்படவும் வாய்ப்புள்ளது.

மதுபாவனை பாலியல் உணர்வை தூண்டும் நீடித்த புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதெல்லாம் உண்மைக்கு மாறான கருத்துகளாகும். நீண்ட நாள் மதுபாவிப்பவர்களில் மதுபாவனை நரம்புத் தொகுதியிலும், ஓமோன் தொகுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துவதால் ஆண்குறி விறைப்பேறும் பொறிமுறையுடன் சம்பந்தப்பட்ட தூண்டல்கள் அதனை தொடர்ந்து, கடற்பஞ்சு போன்ற குருதிக்குழாய்களின் விரிவடைதல், அதனுள் இரத்தம் பாச்சப்பட்டு ஆண்குறி

**டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்**
**உளநல மருத்துவர்**
**வாழைச்சேனை மருத்துவமனை**

விறைப்பேறுதல் (Erection) என்பன நிகழமுடியாது.

எனவே அவரால் தனது மனைவியுடனோ, காதலியுடனோ உடலுறவை வைத்துக்கொள்ள முடிவதில்லை. இப்பாதிப்பு நிரந்தரமானது மீளக் கொண்டு வருவது கடினமானது.

காலில் உள்ள இரத்த குழாய்களிலும், நரம்புகளிற்கு இரத்த விநியோகம் செய்யும் குழாய்களிலும் அடைப்பு ஏற்படுவதால் கால்களில் விறைப்பு, எரிவு போன்ற உபாதைகளிற்கு உட்படுகின்றன (Peripheral Neuropathy) சில வேளைகளில் நாட்பட்ட புண்கள் (Chronic wounds) ஏற்படவும் வாய்ப்புள்ளது.

---

# பெண்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட.



மனஅழுத்தம் (Stress) என்பது ஒரு நோய் அல்ல. அது ஒரு வகையான அறிகுறி(Symptom). ஒரு பிரச்சினைக்கான அறிகுறி என்று மனநல மருத்துவர்கள் கூறுகின்றனர். மனஅழுத்தம் என்பது நம் மீது நாம் திணித்துக் கொள்ளும் அல்லது பிறரால் திணிக்கப்படும் அழுத்தம் (Pressure) தான். நான் இதைத் தான் செய்ய




வேண்டும், இவ்வளவு செய்ய வேண்டும் என்று நமக்கு நாமே ஒரு அழுத்தத்தை கொடுக்கிறோம்.

இந்த அழுத்தத்திற்கு பெண்கள் அதிகம் ஆளாகின்றனர். நம் சமூகத்தில் பெண்களுக்கான வரையறைகள் அதிகம்.

உதாரணமாக ஒரு உடையை தெரிவு செய்வதில் கூட சில பெண்கள் நிறைய சிந்திக்க வேண்டி உள்ளது. காரணம் யார் என்ன சொல்வார்களோ என்ன நினைப்பார்களோ என்ற பயம். தாம் விரும்பியதை செய்வதில் தயக்கம், சமூகம் அதை எப்படியான கோணத்தில் பார்க்கும் என்பது முக்கியமான பிரச்சினை. பெண்கள் ஒரு விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டும். அதாவது அவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில்தான் அவர்களது குடும்பத்தின் வளர்ச்சி உள்ளது என்பதை அவர்கள் உணரவேண்டும். மனஅழுத்தத்தின் உச்சம் சிலருக்கு தற்கொலையில் முடிகிறது. பெரும்பாலும் திருமண வாழ்வில் தோல்வியடையும் போதும் பிள்ளை பேறுக்கு பின்னாலும் மன அழுத்தம் காரணமாகவும் சில பெண்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். எதிர்பார்ப்புகள் அதிகம் இருப்பதும் ஒரு வித அழுத்தம் தான். நாம் எதிர்பார்த்த விடயங்கள் நிறைவேறாது போகும் சமயத்தில் அதிக மன அழுத்தத்திற்குள் தள்ளப்படுறோம்.

பொதுவாக ஆண்களை விட பெண்களிடம் கிரகிக்கும் தன்மை அதிகம் உள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆண்கள் ஒரு சமயத்தில் ஒரு வேலையில் தான் கவனம் செலுத்துவார்கள் ஆனால் பெண்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளில் கவனம் செலுத்தும் ஆற்றல் கொண்டவர்கள். இந்த ஒரு விடயம் கூட அவர்களின் மன அழுத்தத்திற்கு காரணம் என்று கூறலாம். பெண்களைப் பொறுத்த வரையில் மனஅழுத்தத்திற்கு பல காரணங்கள் உண்டு. திருமணம், வேலை, குழந்தை என்று எல்லா சந்தர்ப்பங்களிலும் பெரும்பாலான பெண்கள் சுற்றி இருப்பவர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டு மனஅழுத்தத்திற்கு ஆளாகின்றனர். இளம் வயது பெண்களுக்கு வேலையிலும் வேலை செய்யும் இடத்திலும் எதிர்பாலினரால் ஏற்படும் அழுத்தம், திருமணத்தின் பின் குழந்தையின்மை ஒரு மனஅழுத்தம் என்றால், குழந்தை பிறந்த பின் குடும்பத்தினரால் ஏற்படும் அழுத்தங்கள் அதிகம். கணவன், பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழந்தை பராமரிப்பு பற்றி பல அழுத்தங்களை பெண்களில் திணிக்கிறார்கள். தூக்கமின்மை மற்றும் தன்னையும் குழந்தையையும் கவனித்து கொள்ள வேண்டும் அதையும் சரியான முறையில் செய்ய வேண்டும் என்ற அழுத்தம் அதிக மனஅழுத்தத்திற்கு காரணமாகிறது. அதிலிருந்து வெளிவருவது எல்லா பெண்களுக்கும் அவ்வளவு எளிதாக இருப்பதில்லை.

## தீர்வுகள்

இந்த மனஅழுத்தத்தில் இருந்து வெளிவர வேண்டும் என்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை பார்போம். சரியான சமயத்தில் சரியான முடிவுகளை எடுக்கவேண்டும். நான் இதை தான் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தால் அந்த முடிவில் தீர்மானமாக இருக்க வேண்டும். குடும்பமா, வேலையா என்று வரும் போது இது தான் என்று உறுதியான முடிவு எடுக்க வேண்டும். நாம் சிலவற்றை தேர்த்தெடுக்கும் போது சிலவற்றை விட்டுக் கொடுத்து தான் ஆக வேண்டும். எது வேண்டும் என்பது நம்முடைய சுய முடிவில் உள்ளது. எல்லோராலும் ஒரே விதமான முடிவுகளை எடுக்க இயலாது. அது நமக்கு எதில் எவ்வளவு சாதகமான விசயங்கள் உள்ளன என்பதை பொறுத்ததே. முடிவுகளை அடிக்கடி மாற்றிக் கொள்ள கூடாது. அப்படி மாற்றிக் கொண்டே இருந்தீர்களென்றால் நீங்கள் மனஅழுத்தத்தில் இருந்து வெளிவருவது கடினம். உங்களுக்கு மனஅழுத்தம் தரும்

**சகி**

பிரச்சினைகளை ஒரு இடத்தில் குறித்து வையுங்கள் அதற்கான தீர்வு என்று நீங்கள் நினைக்கும் முடிவுகளையும் அதில் குறித்துக் கொள்ளுங்கள், ஏன் எழுதி வைக்க வேண்டும் என்றால் நம் மூளையில் நொடிக்கு நொடி பல சிந்தனைகள் வந்து போகின்றன. ஆகவே நம் பிரச்சினைகள் என்ன? அதன் தீர்வு என்ன? என்பதை சரியான முறையில் கையாள வேண்டும். உங்களுக்கு பிடித்தவற்றை செய்யுங்கள்.

நம்பிக்கையான யாராவது ஒருவரிடம் உங்கள் பிரச்சினைகளை பற்றி மனம் திறந்து பேசுங்கள், அது உங்கள் குடும்பத்தினரோ, கணவரோ அல்லது தோழியோ யாராக இருக்கலாம். உங்கள் எண்ணங்கள் கருத்துக்களை வெளிப்படையாக சொல்ல பழகிக்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# தமிழ் துரோகியாய், இடதுசாரி எதிர்ப்பாளனாய் பார்த்தோமே!

அவர் எதனையும் சேர்த்து வைக்கவில்லை, அவரது நேர்மை அதற்கு அவரை அனுமதிக்கவில்லை 1997 ஆம் ஆண்டு என நினைக்கிறேன் மோசமான இராணுவக்கெடுபிடிகள் நிறைந்த காலம் அவர் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாரா என்பது நினைவில்லை. ஒரு நாள் கொட கொடவென ஓடும் சி.ரி.பி லைன் பஸ்ஸில் நான் கொழும்பு செல்கிறேன். மக்களோடு மக்களாக அவரும் என்னுடன் பிரயாணம் செல்கிறார்

கதைத்துக்கொண்டு செல்கிறோம்

ஹபரணையில் இறங்கி ஏறுகையில் அவரது காலில் அடிபட்டு இரத்தம் வழிகிறது அதனையும் தாங்கிக்கொண்டு பிரயாணம் செய்கிறார்.

எம் பிக்கள் ஆனதும் மிகப்பெரிய வானில் சொகுசாகப் பிரயாணம் செய்யும் இன்றைய ஆட்களின் ஞாபகம்தான் இப்போது வருகிறது. அவரது கடைசிக்காலம் மிகவும் துயரமானது. உண்மையும் நேர்மையும் அர்ப்பணமும்ம் அவருக்கு அளித்தவை தனிமையும் முதுமையும் வறுமையுமே. அவரது பரம்பரை வீடும் விற்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த வீட்டை வாங்கிய மிகபெரிய மனம் கொண்ட அவரது மாணவர் அவர் இறந்த பிறகே அந்த வீட்டைத் தான் எடுப்பதாகக் கூறியமையினால் மட்டக்களப்பில் மத்திய கல்லூரிக்கு அருகில் இருந்த தனது பழைய வீட்டில் தனது பழைய மரத்தளபாடங்கள் ,பழைய புத்தகங்கள் ,பழைய உடுப்புகள். பழைய பாத்திரங்கள் , பழைய போட்டோக்களுடனும்

பழைய நினைவுகளுடன் தனது இறுதிக் காலத்தைக் கழித்து வந்தார் பிறின்ஸ் காசிநாதர்'. சிலர் அவரை இடைக்கிடை சென்று சந்தித்து வந்தனர் அடிக்கடி சென்று சந்திப்பவர்களில் நானும் என் மனைவியும் அடங்குவோம் போகாவிட்டால் உரிமையோடு போனில் அழைத்து", "நான் செத்த பிறகா வரப்போகிறீர்கள்" என்பார் தனது முதுமையை முக்கியமாகத் தனிமையைத் தனக்கேயுரிய பாணியில் எம்முடன் பகிர்ந்து கொள்வார்.

வறுமையை அவர் ஒரு போதும் பகிர்ந்து கொண்டதில்லை. அவரது ஆளுமை அப்படி. அவர் இறுதிக்காலம் வரை அவருடனான தொடர்பு எனக்கு வாழ்க்கையின் இன்னொரு பக்கத்தைக் கற்பித்திருக்கிறது. இருந்தபோது புகழ்மிக்க ஆசிரியனாக இருந்து, கற்பித்த அவர் தன் இறப்பிலும் எமக்குக் கற்பிக்கிறார். சேர் செத்த பிறகா வரப்போகிறீர்கள் எனப் நீங்கள் போனில் கேட்பீர்கள்.

என்ன துயரம்!

இப்போது நான் வெளியில் நிற்கிறேன் உடனே வர முடியாத நிலை.

உங்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியாத நிலை.செத்தபிறகும் உங்களைக்காண வரவில்லையே என்ற துயரம் மனதை இருள்போல அப்பிக் கிடக்கிறது.

சென்று வாருங்கள் சேர்.

தொடர்ச்சி...

# 'பாராளுமன்றத்தை கலைத்தமை அரசியலமைப்புக்கு முரணானது'



குறித்த மனுக்களுக்கு எதிராக கடந்த நவம்பர் 13 ஆம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருந்தபோது மூன்று நீதியரசர்களே விசாரணைகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அரசியல் யாப்பின் பிரகாரம் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எற்க வேண்டும் என்ற அவசியம் ஜனாதிபதிக்கு இல்லை என மகிந்த தரப்பு உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தலாமா, இல்லையா என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிடுவார் என உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

# கஞ்சா கடத்தல் : 4 பேர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் இருந்து கல்முனை பிரதேசத்திற்கு டொல் பீன் ரக வான் ஒன்றில் நாலரைக் கிலோ கஞ்சாவை எடுத்துச் சென்றவர்களை பொலிசார் துரத்திச் சென்று களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வைத்து கைது செய்த சம்பவம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிசார் தெரிவித்தனர். களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிசார் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் வீதி சோதனை நடவடிக்கையில் சம்பவதினமான இன்று முற்பல் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் காத்தான்குடி பிரதேசத்தில் இருந்து கல்முனை நோக்கி சென்ற டொல்பீன் ரக வான் ஒன்றை பொலிசார் நிறுத்துமாறு சமிக்கை காண்பித்தனர். ஆனால் குறித்த வான் பொலிசாரின் சமிக்கையை மீறி தப்பி ஓடியுள்ளது. இதனையடுத்து போக்குவரத்து பொலிசார் ஏனைய பொலிசாருக்கு குறித்த வான் தொடர்பாக தகவல் தெரிவித்துவிட்டு, வானை பின்தொடர்ந்து துரத்திச் சென்றபோது களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பகுதியில் வைத்து வானை பொலிசார் வழிமறித்து மடக்கி பிடித்து சோதனையிட்ட போது, வானில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்டகஞ்சாவை மீட்டதுடன் 4 பேரை கைது செய்தனர். இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் 18 தொடக்கம் 20 வயதுரையிலானவர்கள் எனவும் இவர்கள் காத்தான்குடியைச் சோர்ந்தவர்கள் எனவும் பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் கைது செய்தவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி...

# பெண்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட.

கொள்ளுங்கள், அது சரியோ தவறோ எதுவாக இருந்தாலும். அதை சொல்லாமல் மனதிலேயே பூட்டி வைப்பதால் மன அழுத்தம் தான் அதிகமாகும். யார் என்ன நினைப்பார்கள் இந்த சமூகம் என்ன சொல்லும் என்றெல்லாம் நினைப்பதை நிறுத்துங்கள். சமூகம் என்று தனியாக எதுவுமில்லை, எந்நேரமும் நம்மையே கண்காணித்துக் கொண்டிருக்க. சமூகம் என்பது நாமும் நம்மை சுற்றி இருப்பவர்களும் தான். அவரவர்களுக்கு சொந்த பிரச்சினைகளும் தேவைகளும் உள்ளன. நாம் நமது முடிவுகளில் உறுதியாக இருக்க வேண்டும். நமக்கு இருக்கும் தேவைகளையும் நாம் செய்ய வேண்டிய விடங்களையும் சரியான முறையில் கையாள வேண்டும். அவ்வாறு நீங்கள் செய்கையில் மனஅழுத்தத்தை உடைத்தெறிந்து அதிலிருந்து வெளிவர முடியும்.

தொடர்ச்சி...

# "கெனடி" என்னும் முன்கள வீரர்

இவ்வாறு கால்பந்தாட்டம் எனும் வித்தையூடாக மட்டக்களப்பிற்கு புகழ் பெற்றுத் தந்த ஒப்பற்ற வீரனாகத் திகழ்ந்த திரு கெனடியைப் பற்றிக் கேட்டறிந்து அவரைப் போல் பயிற்சி பெற்றால் சமகாலத்தில் மட்டு நகர் வீரர்கள் மேலும் விருத்தி பெற்றுத் திகழ்வர் என்பது உறுதியானது.

தொடர்ச்சி...

# எமக்கும் ஓட்டியாய், தோழனாய் வாய்த்த ஒரு கண்ணன் – 'வர்ணகுலசிங்கம்'

உள்ள மிக நல்ல சௌகரியங்கள் அப்போது இருக்கவில்லை.

ஆபத்து மிகுந்த அப்பிரயாணங்களில் நல்லதோர் நம்பிக்கைத் துணையாக இருப்பார் வர்ணகுலசிங்கம் மிக நம்பிக்கையான சாரதி, அவதானமான சாரதி.

சில பயணங்கள் இரவு முழு நேரப்பயணங்கள். சில பயணங்கள் பகல் பயணங்கள்.

சில வேளைகளில் இரவு நேரங்களில் செல்லும் இடங்களில் தங்க வேண்டியும் வரும் பத்திரமாகவும் அதி கவனத்துடன் எம்மை உரிய இடத்துக்கு உரிய நேரத்திற்குக் கொண்டு சேர்ப்பார் சாரதியாக மாத்திரமன்றி ஒரு நல்ல துணையாகவும் நண்பராகவும், நல்லதோர் தம்பியாகவும் செயற்படுவார்

செல்லும் வழியில் களைப்பு அயர்ச்சி நீங்கக் கதைத்துக்கொண்டும் செல்வோம் அப்போதுதான் அவரது அகலப்பார்வையையும் எதிலும் பரிச்சியமும் ஆழமான அறிவும் அவரிடம் இருப்பதை அறிந்தேன்

1995க்கும் 2002 க்கும் இடைப்பட்ட காலம் கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றின் சோதனைக் காலங்கள் பல்கலைக்கழகம் பல பிரச்சனைகளின் மையத்தில் இருந்தது. மூடப்படும் நிலையிற்கூட இருந்தது. அக்காலங்களில் அங்கு பணியாற்றிய கல்விசாரா ஊழியர்களின் பங்களிப்பும், விசேடமாக வர்ணகுலசிங்கம் போன்றோரின் பங்களிப்பும் மிக மிக அதிகம்.

நேர்மை, உண்மை கடமை உணர்வு அதிகாரிகளிடம் மரியாதை பணிவு என்பன அவரிடம் நான் கண்ட குணாதிசயங்கள்.

இவற்றை விட அவரிடம் எனக்குப் பிடித்த அம்சம் அநியாயம் பொறுக்க முடியாது குமுறும் அவரது உள்ளமே.

கிழக்குப்லகலைக்கழக வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர்.

தானுண்டு தன் வேலை உண்டு என இருந்து விடாமல் பல்கலைக்கழக அபிவிருத்தி வேலைகளிலும் பங்கு கொண்டார். 1997 களில் பேராசிரியர் சிவத்தம்பியை ஓரிரு வருடம் இங்கு பணியாற்ற அழைத்திருந்தோம். வர்ணகுலசிங்கம் அவரின் அனுக்கத் தொண்டரானார். வர்ணகுலசிங்கத்தின் குணாதி சயங்களாலும் அன்பினாலும் கவரப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பி வர்ணகுலசிங்கத்தை தம்பி தம்பி என்றே அழைத்தார். சிவத்தம்பி அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் கண்ணனும் ஆனார் வர்ணகுலசிங்கம்

ஒருமுறை எனது மனிவியாரை வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டியிருந்த சமயத்தில் வர்ணகுலசிங்கம் தன் குடும்பத்தில் ஒருவர் போல அந்தரப்பட்டு ஓடி ஓடிச் செய்த உதவிகள் எனக்கு ஞாபகம் வருகின்றன. எங்களுக்கு மாத்திரமல்ல எவருக்கும் அவர் இதே உதவிகளைச் செய்வார்.

மருத்துவ பீடமான சௌக்கிய பீடம் ஆரம்பிக்கப்பட்ட பின் வந்தாறுமூலையிலிருந்து அவர் மட்டக்களப்புக்கு அனுப்பப் பட்டார் அங்கும் அவர் அனைவரது மனங்களையும் கவர்ந்தார்

வர்ணகுலசிங்கம் சென்ற வாரம் ஓய்வு பெற்றார்

இவரைப்போன்ற அர்ப்பணிப்பும் சேவையில் அக்கறையும் கொண்டோர் ஓய்வு பெறுவது அந்நிறுவனத்திற்குப் பெரும் இழப்பே.

தன் ஓய்வு நாளை மகிழ்ச்சியுடனும் நிறைவுடனும் பிரயோசனத்துடனும் அவர் கழிப்பார். பல்கலைக்கழகத்தில் இருந்ததைப்போல நிறைய வேலைகள் அவரது கிராமமான கிரான்குளத்திலும் அவருக்குக் காத்திருக்கின்றன.

வர்ணகுல சிங்கத்தை அறிந்தவர்கள் இதை உறுதியாக அறிவார்கள்.

எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள் வர்ணகுலசிங்கம்

# சிறப்பு மாநாடு

## இலங்கையில் போருக்குப் பின்னரான சமூக - பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு
காலம் : 19 (சனிக்கிழமை), ஜனவரி, 2019

### ஏற்பாடு: லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயம் மற்றும் புலையவெளி பேச்சியம்மன் ஆலயம்



போருக்குப் பின்னரான இலங்கையில் சமூக - பொருளாதார மீளுருவாக்கம் குறித்து இந்த மாநாடு ஆராயும். வழங்கப்படும் உதவிகளை விநியோகிப்பதில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு, செயற்பாடு குறித்து இது விவாதிக்கும்.

இந்த வகையில், போருக்கு பின்னரான தேவைகள் தொடர்பில் எந்த அளவுக்கு புலம்பெயர் மக்களின் பங்களிப்பு இருக்கிறது என்பதையும், கருத்துருவாக்க சிந்தனைகளிலும் மற்றும் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புக்கான கொள்கையிலும் இதுவரையிலான அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்றும் இந்த மாநாடு ஆராயும்.




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa